DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
i HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1537 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 19, 2025

## கோலாகலமாகவும் எழுச்சியுடனும் கனடா — ரொறன்ரொ மாநகரில் இன்று 19ம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது அனைத்துலக திருக்குறள் மாநாடு — 2025





(ரொறன்ரோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)

கனடாவில் இன்று 19ம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் அனைத்துலக திருக்குறள் மாநாட்டில் கலந்து சிறப்பிக்கும் முகமாக, தமிழ்நாடு - தென்னாபிரிக்கா- மலேசியா மற்றும் எமது தாயகம்- இலங்கை அத்துடன் பல்வேறு நாடுகளிலிருந்தும் அறிஞர் பெருமக்களும் தமிழ் மொழி மீதான பற்றுக் கொண்ட ஆர்வலர்களும் நேற்று வியாழக்கிழமை ரொறன்ரோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கினர்.

அவர்களை வரவேற்கும் வகையில் மாநாட்டுக் குழுவின் தலைவர் வைத்திய கலாநிதி லம்போதரன் அவர்கள் தலைமையில் சென்ற அன்பர்களில் பல கனடிய செயற்பாட்டாளர்கள் அடங்கியிருந்தனர்.

விருந்தினர்களை விமான நிலையத்தில் வரவேற்கும் தருணத்தில். திருவள்ளுவப் பெருமானின் பிரசன்னம் அங்கு சில மணித்துளிகள் தோன்றியது போன்ற உணர்வைப் பெற்றோம்.. எமது வாழ்வியலும் மொழியும் பண்பாடும் முத்தமிழோடு சங்கமிக்கவுள்ள வெள்ளி-சனி-ஞாயிறு ஆகிய 3 நாட்களும் கனடா வாழ் தமிழ் மக்களுக்கு பெருமைக்குரிய நாட்களாக கழியப்போகின்றன என்பது திண்ணம்! அனைவரும் வருக! வள்ளுவப் பெருமானையும் அவரது வள்ளுத்தையும் கொண்டாடி பெருமைகொள்வோம்.!

## எமது "அனைத்துலக தமிழர் பேரவை" அமைப்பின் மூலம் தாயக மண்ணில் வாழும் உறவுகளுக்கு நாம் நம்பிக்கைகளை விதைக்க வேண்டும்!

### "அனைத்துலக தமிழர் பேரவை" அமைப்பின் தலைவர் நிமால் விநாயகமூர்த்தி அழைப்பு!



"நாம் பிறந்து வாழ்ந்து கல்வி கற்று அறிவு பெற்று எமது தாய் மண்ணை விட்டு புலம் பெயர்ந்து வந்தாலும் அந்த மண்ணில் இலட்சக் கணக்கானவர்கள் இன்னும் வாழ்ந்த கொண்டிருக்கின்றார்கள். எனினும் அவர்களால் அங்கு தங்கள் வாழ்வைத் தொடர்வதற்கு உரிய அனைத்து கிடைப்பாதாக இல்லை. வாழ்வதற்கு போதிய சுதந்திரமும் கிடையாது.

இவ்வாறான சூழ்நிலையில் அங்குள்ள எமது உறவுக-ளையும் குறிப்பாக இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கு நாம் எமது ஆதரவையும் ஒத்தாசையையும் வழங்க வேண்டும். அவர்களுக்கு தேவையான அனைத்தையும் நாம் வழங்க முடியாவிட்டாலும் எம்மால் இயன்றளவிற்கு நாம் உதவிகள் செய்ய வேண்டும். எனவே அதற்கான திட்டங்களையும் நாம் தீட்ட வேண்டும். (தொடர்ச்சி ம் பக்கம்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd fl) Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
PRIME LEGAL SERVICES
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

# Carefirst Family Health Team

Carefirst Family Health Team

## Accepting New Patients
## புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய காத்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.

அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**



Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**




11/24

# OCCUPATIONAL DISABILITY RESPONSE TRAINING

PREVENTION LINK

உங்கள் தனிப்பட்ட பணியிடத்திற்கும் நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிலாளர்களுக்கும் பயனளிக்கும் வகையில் தேவையான திறன்கள், தன்னம்பிக்கை மற்றும் சமூகக் கட்டமைப்பைப் பெறுங்கள்.

தடுப்பு இணைப்பு உயர்தர, விரிவான படிப்புகளை வழங்குகிறது தொழிலாளர்களின் இழப்பீடு, இயலாமை தங்குமிடம், வேலைக்குத் திரும்புதல் மற்றும் மனநலம் போன்ற தலைப்புகளை உள்ளடக்கியது, மேலும் தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் முதலாளிகளுக்கு ஒரே மாதிரியாக நன்மை பயக்கும்.

## FALL TRAINING 2025

**Psychological Health & Safety and Return to Work**
» September 28 – October 3 (In-person)

**Level Two: Benefits and Services**
» October 9-23 (Virtual)

**Mental Health 101, Mindfulness, Challenges in Life & Self Care**
» September 19 (In-person)
» October 28 (Virtual)

**Return to Work 101**
» December 2 (Virtual)

**Principles of Accommodation Law**
» December 3 (Virtual)

Scan the QR code to register for a course.

Contact us at info@preventionlink.ca



Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் உதயன் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# செம்மணியை அகழ்வை தன் பணி போன்று தலையில் சுமந்து நின்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா அவர்கள் பதவி உயர்வுடன் செல்வது அந்தப் பணிக்கு வலுச் சேர்க்குமா அல்லது வாய் மூடவைக்குமா?

இலங்கையின் இரண்டாவது பெரிய மனிதப் புதைகுழியாகக் தற்போது இலங்கை அரசாலும் தமிழ் மக்களாலும் அதற்கப்பால் புலம் பெயர் சமூகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளதாகக் கருதப்படும் இடத்தை அழ்வாய்வு செய்யும் பணிகளை ஆரம்பத்தில் இருந்தே தன் தலையில் சுமந்து நின்றவரும்

புகைகுழி அகழ்வு என்னும் பணியை ஒரு அரச பணியாக மாற்றி தெற்கிலிருந்து எவ்வித இடையூறுகளும் அற்ற வகையில் நகர்த்திச் சென்றவருமான நீதிபதி .ஏ. ஆனந்தராஜா அவர்களின் நிதானமானதும் நேர்மையானதுமான பணிகளை உலகத் தமிழர் பாராட்டிக் கொண்டிருந்த தருணத்தில் அவருக்கு வழங்கப்பெற்றிருக்கும் பதவி உயர்வு செம்மணி என்னும் முக்கிய பகுதியான விளங்கிய அந்த பிரதேசத்தின் அவசியத்தை அல்லது அங்கு இடம்பெறும் பணிகளை "குறைப்பு" நடவடிக்கைகளுக்கு உள்ளாக்குமா என்னும் சந்தேகம் சாதாரண மக்களுக்கு மாத்திரமல்ல இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின்

உறுப்பினர்களுக்கும் எழுந்துள்ளதை மேற்படி அமைப்பு வெளியிட்டுள்ள பிந்திய அறிக்கையொன்றின் மூலம் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

செம்மணி என்று எலுமபுக் கூடுகளையும் அதற்கு உரித்தானவர்களின் ஏனைய எச்சங்களையும் தொடர்ச்சியாக வெளியுலகிற்கு தினமும் காட்டும் ஒரு தளமாக விளங்கும் அந்த இடத்தை குற்றச் சம்பவம் இடம்பெற்ற பகுதியாக அறிவிக்க நடவடிக்கை எடுத்தவரும் தலைமேற் சுமந்து நின்ற நீதிவான் நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா அவர்களே ஆவார்.

அவரது பதவி உயர்வு அறிவிப்பு வந்த பின்னர் மேற்படி செம்மணி அகழ்வுப் பணிகளை தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டவர் யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் செல்வநாயகம் லெனின்குமார் என்றும் அவரது மேற்பார்வையில் அகழ்வாய்வுகள் இடம்பெற்று வருவதாக பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையாகும் சட்டத்தரணி ரணிதா ஞானராஜா ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருக்கின்ற விடயமானது பொதுமக்களுக்கும் பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களுக்கு சற்று ஆறுதலைத் தந்திருக்க வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு செப்டெம்பர் 3ம் திகதி உத்தியோக பயணம் ஒன்றை மேற்கொண்ட ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க கொழும்பு சென்றவுடன் 18 புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு நியமனக் கடிதங்களை வழங்கயதை நாடே உற்று நோக்கியது அவர்களில் , முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட கோட்டை நீதிபதி நிலுபுலி லங்காபுர மற்றும் செம்மணி விவகாரங்களை இதய சுத்தியோடு மேற்கொண்ட யாழ்ப்பாண நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா ஆகியோரின் பெயர்களும் உள்ளடங்கியிருந்தன.

தற்போது செம்மணி அகழ்வாய்வை விசாரிக்கும் தற்போதைய கற்றறிந்த நீதவான் பதவி உயர்வு பெற்றால், தற்போதைய விசாரணை தொடர்பாக அவருக்குப் பின்னர் விசாரணைகளை முன்னெடுக்கும் நீதவானுக்கு தேவையான அனைத்து உதவிகளும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டுமென, ஜனாதிபதி இந்த நியமனங்களை வழங்குவதற்கு முன்னதாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்ட செம்மணிப் புதைகுழி குறித்த தனது முதல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறாக. இரண்டாம் கட்ட அகழ்வாய்வில் 3ம் திகதி புதன்கிழமை வரையிவரையில் செம்மணி சித்துப்பாத்தி இந்து மயான மனித புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட மொத்த எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 231 ஆக உயர்வடைந்துள்ளது என்ற செய்தியும் அனைவரையும் கலக்கமடையச் செய்துள்ளது.

முன்னாள் நீதவானால் குற்றம் நடந்த இடமாக அறிவிக்கப்பட்டுள்ள புதைகுழியில் புதைக்கப்பட்டவர்கள், நீதிக்குப் புறம்பான கொலைகளுக்கு உள்ளானவர்கள் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

பொது அதிகாரிகள் மற்றும் தங்கள் உறவுகளை இழந்ததனால் உளரீதியாக பாதிக்கப்பட்டவர்களை துன்புறுத்துவதைத் தவிர்க்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவிக்கு உத்தரவிடுமாறுஅன்றைய தினம் (செப்டெம்பர் 03) வெளியிடப்பட்ட அறிக்கையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் மாஅதிபருக்கு பரிந்துரைத்துள்ளது. என்ற விடயத்தை நாம் உற்று நோக்குமிடத்து இலங்கையில் இயங்கும் மனித உரிமைக் குழு தன் பணியை சீராகச் செய்கின்றது என்பதைக் காட்டுகின்றது

செம்மணி மனிதப் புதைகுழி விசாரணையில் இலங்கை பொலிஸாரும், இலங்கை இராணுவமும் "இணைந்த தரப்பினராக" அடையாளம் காணப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 13 பக்க அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. விசாரணைகளை நடத்தும்போது (அதாவது, ஒரு நபர் வாக்குமூலம் அளிக்க ஏன் அழைக்கப்படுகிறார் என்பதை தெளிவாகத் தெரிவிப்பதற்காக) ஜூலை 2, 2025 திகதியிடப்பட்ட பொலிஸ்மா அதிபரின் சுவுஆ 101.'.ஊசுவுஆ 61 இலக்க சுற்றறிக்கைக்கு அமைய செயல்படுமாறும், குறித்த தவறுகள் தொடர்பிலான தெளிவான சந்தேகம் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களைத் தவிர, செம்மணி

புதைகுழி விசாரணை குறித்து செய்தி வெளியிடும் ஊடவியலாளர்களை அழைத்து புலனாய்வு அதிகாரங்களை துஂபிரயோகம் செய்வதைத் தவிர்க்குமாறு பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் விசாரைணைப் பிரிவுக்கு (ஊவுஜனு) அறிவுறுத்தல்களை வழங்குமாறும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மீண்டும் ஒருமுறை பொலிஸ் தலைவருக்கு நினைவூட்டியுள்ளது.

செம்மணி மனித புதைகுழியில் குவியலாக 08 என்புக்கூட்டு தொகுதிகள் இன்றைய தினம்(04) அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்துடன் புதைகுழியினுள் பிறிதொரு பகுதியில் இரண்டு என்புக்கூடுகள் சிக்கலான முறையில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதேவேளை புதைகுழியின் மற்றுமொரு இடத்தில் 3ம் திகதி புதன்கிழமை இரண்டு என்புக்கூடுகளுக்கு மேலாக ஒரு என்புக்கூடும் , ஒரு எலும்புக்கூட்டின் தோள்பட்டை பகுதியுடன் தொடுகையுற்றவாறு மற்றுமொரு என்புக்கூடும் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவை 4ம் திகதி அன்றைய தினம் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன என்பதெல்லாம் ஒரு விசித்திரமான தகவல்களாகவும் அதே வேளை உள்ளங்களை அதிரவைத்து மேலும் மேலும் அதிர்ச்சி தரும் எதிர்பார்ப்புக்களை பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கக் கூடியவையாக இருப்பதும் உண்மையே

கடந்த 2ஆம் திகதி ஒரு எலும்புக்கூட்டு தொகுதியின் தோள்பட்டையுடன் தொடுகையுற்ற நிலையில் மற்றுமொரு என்புக்கூட்டு தொகுதி அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன் , 29ஆம் திகதி ஒரு எலும்புக் கூட்டு தொகுதியின் மார்பு பகுதியில் ஒப்பீட்டளவில் சிறிய எலும்பு கூடொன்றின் மண்டையோட்டு பகுதி காணப்பட்டவாறு இரு எலும்பு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை செம்மணி என்னும் இடத்தில் எவ்வாறு எமது மக்கள் பழிவாங்கப்பட்டு புதைக்கபட்டார்கள் என்பதும் வெளிச்சமாக தெரிகின்றன

இவ்வாறான் மனித புதைகுழிகள் எங்கே உள்ளது என பார்த்தால் இராணுவத்தின் மண் அணை செல்கின்ற காவலரண்களுக்கு அருகிலும் உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள இராணுவ முகாம்கள் மற்றும் சோதனைச்சாவடிகள், சதுப்பு நிலங்களிலும் காணப்படுகின்றன. எனவே முழு அதிகாரத்தைக் கொண்ட ஒரு நீதிபதி இந்தப் பணிக்கு தொடர்ச்சியாக மேற்பார்வையிடும் அதிகாரத்தைக் கொண்டவராக விளங்க வேண்டும் என்பது பாதிக்கப்பட்டவர்களின் வேண்டுகோளாக இருப்பதையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்!

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "யாழ். பல்கலைக்கழக நூலகமே என்னைப் படைப்பாளியாக்கியது"

## சயனைட் அறிமுக நிகழ்வில் தீபச்செல்வன் உரை





**"எங்களுடைய அண்ணன்களும் அக்காக்களும் சயனைட்டுகளை தங்கள் கழுத்துகளில் கட்டிக் கொண்டார்கள். அப்படிக் கட்டிக் கொண்டவர்கள் இன்று நடைப்பிணங்களாக, பிச்சைக்காரர்களாக, கைவிடப்பட்ட மனிதர்களாக அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்."**

எழுத்தாளர் தீபச்செல்வனின் சயனைட் நாவல் அறிமுக விழா 11.09.2025 வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வுக்கு கலைப்பீடாதிபதி எஸ். ரகுராம் தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக ஐ.பி.சி தமிழ், ரீச்சா நிறுவனர் கந்தையா பாஸ்கரன் கலந்து சிறப்பித்தார்.

யாழ். பல்கலைக்கழக தமிழியல் நூலகத்துக்கு சயனைட் நாவல் அன்பளிப்பாக வழங்கப்பட்டதை தொடர்ந்து, குறித்த நாவலினை நூறு மாணவர்களுக்கு தன்னுடைய செலவில் இலவசமாக க.பாஸ்கரன் அவர்கள் வழங்கி வைத்தார். நிகழ்வினை பல்கலைக்கழக மாணவர் லம்போ கண்ணதாசன் தொகுத்து வழங்கி இருந்தார்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆசிரியரான அருணாசலம் சத்தியானந்தன் கருத்துத் தெரிவிக்கையில், "போரை நிறுத்தச் சொல்லி அரசுக்கு அழுத்தம் கொடுக்கக் கூடிய அளவுக்கு அன்று யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மக்களை அணிதிரட்டி அவர்களை வழிப்படுத்தி பாரியளவிலான போராட்டங்களை முன்னெடுத் திருந்தார்கள். யாழ்ப்பாண பல்கலைக்கழகமும் அதன் மாணவர் ஒன்றியங்களும் காலத்திற்கு காலம் காத்திரமான பணிகளை ஆற்றி வந்திருக்கின்றன. இந்தப் பல்கலைக்கழகம் தீபச்செல்வனையும் தமிழ்த் தேசியக் கொள்கையில் இருந்து தடம் மாறாதவராக சரியாக செம்மைப்படுத்தி இருக்கிறது. எத்தகைய அச்சுறுத் தல்களுக்கும் அடிபணியாதவராக இலக்கை நோக்கி எழுதிக் கொண்டிருக்கிறார். போருக்கு பின்னர் புதிய நெருக்கடிகளை சந்தித்து வருகிறோம். எம்மக்களை வழிநடாத்துவதற்கு தலைமையேற்கும் நிறுவனமாக யாழ் பல்கலைக்கழகம் மாற வேண்டும் என்கிற ஏக்கம் தமிழ் மக்களிடம் இருக்கிறது. இந்த நேரத்தில் அவர்கள் மிகுந்த எதிர்பார்ப்பை யாழ் பல்கலைக்கழகம் மீது வைத்திருக்கிறார்கள். போர் முடிந்து 15 வருடங்களாகியும் எங்களுக்கு நீதி கிடைக்கவில்லை. அதற்கான வாய்ப்புகளும் தென்படவில்லை. அடுத்த சந்ததிக்கு எம் போராட்ட வரலாறுகளை இப்படியான படைப்புகள் நிச்சயம் கடத்தும்." என்றார்.

ஐ.பி.சி/ரீச்சா நிறுவனங்களின் உரிமையாளர் கந்தையா பாஸ்கரன் கருத்து தெரிவிக்கையில், "இந்த மண்ணிலே தமிழ்த் தேசியம் தொடர்ந்து நிலைத்திருக்கின்றது. அது காக்கப்பட வேண்டும். தேசிய விடுதலைக்கான போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதற்கு ஒரு சில எழுத்தாளர்கள் அடையாளமாக இருக்கின்றார்கள். அதில் தீபச்செல்வனும் ஒருவர். எம் இனத்தின் மீது நடத்தப்பட்ட கொடுமைகள், நாம் கடந்து வந்த பாதைகள் எல்லாமே எம் இளைஞர்களுக்கு தொடர்ச்சியாக கடத்தப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து கடத்தி செல்ல வேண்டிய பொறுப்பு பல்கலைக்கழக மாணவர்களுக்கு இருக்கிறது. இதன் உள்ளடக்கம் மிக ஆழமானது என்பதாலேயே இந்த புத்தகத்தை வாங்கி மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என முடிவு செய்தேன். ஒவ்வொரு மாணவரும் இதனை படித்து மற்றைய மாணவர்களையும் படிக்க வையுங்கள். உங்கள் கைகளிலே ஏராளமான பொறுப்புகள் உள்ளன." என்றார்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி சிவசுப்பிரமணியம் ரகுராம் கருத்து தெரிவிக்கையில், "இது எங்களுடைய கதை, எங்களிடையே இருக்கக் கூடிய கதை மாந்தர்களின் கதை, அவ்வாறானவர்களை படைப்பாக் கத்தினூடாக தீபச்செல்வன் எங்கள் கண் முன் கொண்டு வந்திருக்கிறார். இதனை வாசித்து அந்த அனுபவங்களை நாங்களும் பெற வேண்டும். எங்கள் வரலாறு மிகவும் முக்கியமானது. அதிலும் பல்கலைக்கழக மாணவர்கள் சந்தித்திருக்கக் கூடிய நெருக்கடிகள் போரின் வெம்மைகளுக்குள் அவர்கள் நின்று களமாடிய விடயங்கள் இவை யாவற்றையும் நாங்கள் அடுத்தடுத்த சந்ததிகளுக்கு கடத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஒரு புறம் ஆயுதப் போராட்டம் வீறு கொண்டு எழுந்த போது பல்கலைக்கழக சூழலிலே அதை ஆதரிப்பதாக, அனுசரித்துப் போவதாக, அதற்கு வலுவூட்டுவதாக ஒரு போராட்ட சூழலை தக்கவைப்பதிலே இங்கிருக்கக் கூடிய மாணவ செயற்பாட்டாளர்கள் மிகக் கடுமையான பணிகளை செய்து வந்தார்கள். மிக சவாலான சூழல்களை எதிர்கொண்டார்கள். பலர் தங்கள் உயிர்களையும் துறந்தார்கள். அப்படியான களச்சூழலில் தான் கண்டுணர்ந்த விடயங்களை உள்வாங்கிக் கொண்டு அவற்றை நாவல் என்கிற வடிவத்தில் ஆவணமாக்கி இருக்கிறார் தீபச்செல்வன். இறுதி யுத்தகாலத்தின் பின்னராக எங்களை திசை திருப்ப மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட செயல்களினூடாக மாணவர்களுக்கு போராட்டம் சார்ந்த முக்கியமான விடயங்கள் தெரியாமல் இருந்து வருவதனை மிக கவலையுடன் கண்டுணர வேண்டியதாக இருக்கிறது. உயிர்களை தியாகம் செய்திருக்கக் கூடிய எப்படியான தியாகங்களை நாங்கள் கண்டு வந்திருக்கிறோம். இப்படியான படைப்பாக்கங்கள் எங்களுக்கு முக்கியமான நினைவூட்டிகளாக இருக்கப் போகின்றன. இந்த நாவல் எமது மாணவர்கள் மத்தியில் அறிமுகமாவது மிகவும் முக்கியமானது. இந்த நாவல் சொல்ல வருகின்ற செய்தியினை நாங்கள் சரியாக புரிந்து கொண்டு வரலாற்றை அடுத்தடுத்த சந்ததிகளுக்கு ஊடுகடத்தக் கூடியவர்களாக நாங்கள் மாற வேண்டும்." என்றார்.

நிகழ்வின் இறுதியில் எழுத்தாளர் தீபச்செல்வன் ஏற்புரையினை ஆற்றுகையில், "அன்றைய போர்க்கால பல்கலைக்கழக சூழலும், எங்களைச் சுற்றியிருந்த போராட்டங்களுமே என்னை செழுமையாக்கியது. யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களாக, மாணவத் தலைவர்களாக உள்ளவர்களுக்கு மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது. பல்கலைக்கழக படிப்பு முடிந்த பின்பு எங்காவது அரச திணைக்களம் ஒன்றிற்கு அபிவிருத்தி உத்தியோகத்தராக வேலைக்கு போகிறோம், கையொப்பத்தை இடுகிறோம். வேலையோடு முடங்கிப் போகிற வேறு எதைப் பற்றியும் சிந்திக்காதவர்களாக நீங்கள் வந்துவிடக் கூடாது என்பது எனது அழுத்தமான கோரிக்கை. இப்படியான ஒரு வாழ்க்கையை நீங்கள் வாழ இந்தப் பல்கலைக்கழகம் கட்டப்படவில்லை. ஒவ்வொரு தனிநபர்களும் உங்களை ஆளுமை மிக்கவர்களாக மாற்றிக் கொள்வீர்களாக இருந்தால் தொழில் முனைவோராக, படைப்புத் துறை சார்ந்தோராக, ஊடகத்துறை சார்ந்தோராக, கல்வித் துறை சார்ந்தவராக இருக்கலாம் நாங்கள் முன்னேறுவதற்கும் முகவரி சொல்வதற்கும் நாங்களே இந்த தேசத்தை ஆள்வதற்கும் பல துறைகள் இருக்கின்றன.


வெறுமனே முன்னாள் போராளியின் வாழ்க்கைப் போராட்டம் சார்ந்த கதையை உங்கள் கைகளில் தரவில்லை. இந்தக் கதையின் வாயிலாக நீங்கள் இந்த தேசத்தில் ஆற்ற வேண்டிய சேவையினுடைய கோரிக்கைக்கான விண்ணப்பத்தைத் தான் உங்களுடைய கைகளில் தந்திருக்கிறேன். 2009 இல் எமது இனத்தை பெருமளவுக்கு இனப்படுகொலை செய்து எங்களுடைய சமூகத்தை ஊமைகளாக்கி விட்டிருந்தார்கள். ஆனால் இன்றைக்கு எங்களுடைய சமூகம் இயல்பாகவே ஊமைகளாகி ஆகக்குறைந்த மனிதப் பண்பும் இல்லாத சமூகமாக நாங்கள் மாறிக் கொண்டிருக்கின்றோம். மிக நூதனமாக இனவழிப்பும், இன ஒடுக்குமுறையும் கட்டவிழ்த்து விடப்படுகின்ற இலங்கைத்தீவில் எங்கள் இருப்பை இல்லாமல் செய்ய நாங்கள் சேவைகளை செய்ய வேண்டும். ஆயிரமாயிரம் எங்கள் வீரமறவர்களை மண்ணுக்குள் புதைத்திருக்கிறோம். அதற்காகவே எங்களுடைய அண்ணன்களும் அக்காக்களும் சயனைட்டுகளை தங்கள் கழுத்துகளில் கட்டிக் கொண்டார்கள். அப்படிக் கட்டிக் கொண்ட ஒரு மாவீரனின் கதையே இது. அப்படிக் கட்டிக் கொண்டவர்கள் இன்று நடைப்பிணங்களாக, பிச்சைக்காரர்களாக, கைவிடப்பட்ட மனிதர்களாக அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நான் இந்த பல்கலைக்கழக நூலகத்திலே அதிக நேரங்களை செலவிட்டிருக்கிறேன். நான் இன்று படைப்பாளியாக மாறி எழுதுகிறேன் என்றால் அதற்கு பல்கலைக்கழக நூலகமே காரணம். கைலாசபதி அரங்கில் தான் நான் மேடைப் பேச்சு பழகினேன். அந்த மகத்துவம் இந்தப் பல்கலைக்கழகத்தில் இருக்கிறது. ஒவ்வொரு முறையும் இந்தப் பல்கலைக்கழகத்துக்குள் காலடி எடுத்து வைக்கும் போது இதயமெல்லாம் ஈரமாகுவதனை உணர்ந்திருக்கிறேன்." என்றார்.




**Tamilthakaval.org**

**ஒரு இலவச சேவை -- A Free Service**



**இணையத்தளம்: www.tamilthakaval.org**

இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடைய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.

மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்கூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.

செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு இணையத்தளம் tamilthakaval.org பார்வையிடவும்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள்.

இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது.

உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "தியாக தீபம்" திலீபன் தனது உன்னதமான உயிரை தியாகம் செய்த நல்லூரில் எழுச்சியாக ஆரம்பமான அவருக்கான நினைவேந்தல்!

பு. கஜிந்தன்

தியாக தீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தல் உணர்வெழுச்சியாக யாழ்ப்டபாணம் நல்லூரில் 15ம் திகதி அன்று ஆரம்பமாகியது.



தமிழ் மக்களின் உரிமைக்காக 12 நாட்கள் உணவையும் நீரையும் ஒறுத்து உயிர்த் தியாகம் செய்த தியாகதீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நல்லூரில் நடைபெற்றது.

நல்லூர் கந்தன் ஆலயம் அருகே அவர் உண்ணாவிரதம் இருந்த இடத்தில் அஞ்சலி நடைபெற்று, தொடர்ந்து, நல்லூரான் பின் வீதியில் அமைந்துள்ள திலீபன் நினைவிடத்தில் நினைவேந்தல் இடம்பெற்றது.

இதன் போது பொதுச் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இவ் நினைவேந்தல் நிகழ்வில் முன்னாள் போராளிகள் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.



# யாழ்ப்பாண மாநகர சபை நிர்வாகத்தில் இயங்கும் பண்ணை மீன் சந்தையில் பல பிரச்சினைகள் உள்ளன என்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன்



யாழ்ப்பாணம் - பண்ணை மீன் சந்தையில் பாரிய பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே மாநகர சபை முதல்வர் நேரில் வந்து பார்த்து அந்தப் பிரச்சினைகளை சீர் செய்யுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

16-09-2025 அன்று செவ்வாய்க்கிழமை அன்றையதினம் குறித்த பகுதிக்கு களவிஜயம் செய்து பார்வையிட்ட பின்னர் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,


யாழ்ப்பாணம் மாநகர சபையினர் மின்சார கட்டணத்தை செலுத்தாததால் மின்சாரத் துண்டிப்பு இடம்பெற்றது. இதனால் வியாபாரிகள் தமது மீன்களை விற்பனை செய்ய முடியாது திரும்பிச் சென்றதை என்னால் அவதானிக்க முடிந்தது. ஆனால் மின்சாரம் துண்டித்த நாளின் கட்டணம் மாநகரசபையால் மீன் வியாபாரிகளிடமிருந்து அறவிடப்பட்டது.

மீன் சந்தையில் இருக்கின்ற மலசலகூடம் மிகவும் மோசமாக காணப்படுகிறது. மாநகர சபை முதல்வரிடம் நான் கேட்பது யாதெனில், நீங்கள் களவிஜயம் செய்து நேரில் வந்து பாருங்கள் இங்கே எவ்வாறான நிலை காணப்படுகிறது என்று.

வெளிநாடுகளில் இருந்து நிதி உதவிகளை பெற்று அரசாங்கம் இவ்வாறான சந்தைகளை அமைத்து தரும்போது மாநகரசபையினர் ஆகிய நீங்கள் அதனை சிறந்த முறையில் பராமரியுங்கள்.

நல்லூர் திருவிழாவில் கடைகளில் கோடிக்கணக்கான வருமானத்தை ஈட்டியிருப்பீர்கள். அந்த நிதியை பயன்படுத்தி இவ்வாறான விடயங்களை சீர்படுத்துங்கள்.

கழிவகத்தின் முக அமைத்துவத்தை சீராக பேணுங்கள். இரவு ஒன்பது மணிக்கு பின்னர் சந்தைக்கு வந்து அங்கு இருக்கின்ற கழிவு நீரை எடுத்து செல்லுங்கள். பகலில் வந்து இடையூறு ஏற்படுத்தாதீர்கள். நீங்கள் பகலில் கழிவு நீரை எடுக்க வரும்போது சந்தைக்கு வருகின்ற மக்கள் துர்நாற்றம் காரணமாக திரும்பிச் செல்கின்றனர் - என்றார்.



கனடிய செய்திகள் Canadian News

# கனடா மதிவாசனின் "ஆக்குவாய் காப்பாய்" தமிழ்த் திரைப்படம் தற்போது சில இந்திய மொழிகளில் "மொழிமாற்றம்" செய்யப்பெற்றுவருகின்றது

கனடாவில் பன்முகக் கலையுலகப் பிரமுகராகவும் ரசிகராகவும் திரைப்படத்தயாரிப்பாளராகவும் இயக்குனராகவும் இசைக் கலைஞராகவும் நடிகராகவும் அத்துடன் கணணித்துறை விரிவுரையாளராகவும் நன்கு அறியப்பெற்ற மதிவாசன் அவர்கள் அண்மையில் தயாரித்து இயக்கிய “ஆக்குவாய் காப்பாய்” என்னும் கனடியத் தமிழ்த் திரைப்படம் தற்போது சில இந்திய மொழிகளிலும் “மொழிமாற்றம்” செய்யப்பெற்றுவருகின்றது. விரைவில் தமிழகம் மற்றும் உலகத்தின் பல வெண்திரைகளிலும் காட்சியளிக்கப்போகின்றது.

மேற்படி “ஆக்குவாய் காப்பாய்” என்னும் கனடியத் தமிழ்த் திரைப்படத்தின் விசேட காட்சியொன்று அண்மையில் கனடா - ஸ்காபுறோ நகரில் வுட்சைட் சினிமாவில் திரையிடப்பெற்றபோது மதிவாசன் அவர்களைப் பாராட்டி ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் வழங்கிய பாராட்டுப் பத்திரத்தை திரைப்படக்காட்சி முடிவுற்ற பின்னர் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடாக்கிளையின் தலைவருமான லோகன் லோகேந்திரலிங்கம் கலைஞர்கள் சூழ்ந்து நிற்க அவருக்கு வழங்குவதை இங்கு காணலாம்.



- தகவல் சத்தியன்

# "எமது "அனைத்துலக தமிழர் பேரவை" அமைப்பின் மூலம் தாயக மண்ணில் வாழும் உறவுகளுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் நாம் நம்பிக்கைகளை விதைக்க வேண்டும்"

## “அனைத்துலக தமிழர் பேரவை” அமைப்பின் தலைவர் நிமால் விநாயகமூர்த்தி அழைப்பு




**(ரொறன்ரோவிலிருந்து ஆர்.என். லோகேந்திரலிங்கம்)**

“நாம் பிறந்து வாழ்ந்து கல்வி கற்று அறிவு பெற்று எமது தாய் மண்ணை விட்டு புலம் பெயர்ந்து வந்தாலும் அந்த மண்ணில் இலட்சக் கணக்கானவர்கள் இன்னும் வாழ்ந்த கொண்டிருக்கின்றார்கள். எனினும் அவர்களால் அங்கு தங்கள் வாழ்வைத் தொடர்வதற்கு உரிய அனைத்து கிடைப்பாதாக இல்லை. வாழ்வதற்கு போதிய சுதந்திரமும் கிடையாது.

இவ்வாறான சூழ்நிலையில் அங்குள்ள எமது உறவுகளையும் குறிப்பாக இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கு நாம் எமது ஆதரவையும் ஒத்தாசையையும் வழங்க வேண்டும். அவர்களுக்கு தேவையான அனைத்தையும் நாம் வழங்க முடியாவிட்டாலும் எம்மால் இயன்றளவிற்கு நாம் உதவிகள் செய்ய வேண்டும். எனவே அதற்கான திட்டங்களையும் நாம் தீட்ட வேண்டும்.

அந்த நோக்கங்களுக்காக ஆரம்பிக்கப்பெற்றதுதான் எமது “அனைத்துலக தமிழர் பேரவை” என்னும் அமைப்பாகும். இந்த அமைப்பின் மூலம் எமது தாயக மண்ணில் வாழும் உறவுகளுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் நாம் நம்பிக்கைகளை விதைக்க வேண்டும்.”





இவ்வாறு கனடாவைத் தளமாகவும் உலகின் பல நாடுகளிலும் கிளைகளைக் கொண்டு இயங்கிவருவதுமான “அனைத்துலக தமிழர் பேரவை” அமைப்பின் தலைவரும் சமூக செயற்பாட்டாளரும் கணக்காளருமான நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் கடந்த செப்டம்பர் 11ம் திகதி வியாழக்கிழமையன்று மாலை மார்க்கம் நகரில் அமைந்துள்ள கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் CTCC Business Centre, மண்டபத்தில் நடைபெற்ற “அனைத்துலக தமிழர் பேரவை” அமைப்பின் ஊடகவியலாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் சந்திப்பின் போது அழைப்பு விடுத்தார்.

மேற்படி “அனைத்துலகத் தமிழர் பேரவை” (FGT) அமைப்பானது எதிர்வரும் October 10ம் திகதி 11ம் திகதி மற்றும் 12ம் திகதி 2025 ஆகிய மூன்று நாட்களும் University of Toronto Scarborough மற்றும் Scarborough கொன்வென்சன் சென்றர் விழா மண்டபம் ஆகியவற்றில் நடைபெறவுள்ள “இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான வாய்ப்புகள் - 2025”, (“Prospects for Integrated Development of the North and East of Sri Lanka – 2025”) என்னும் தலைப்பிலான மாநாடு தொடர்பாக ஊடகங்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் அறியத் தரும் முகமாக நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.





மேற்படி கூட்டத்தில் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும் சமூகச் செயற்பாட்டாளருமான முரளி மற்றும் பேராசிரியர் சந்திரகாந்தன் மற்றும் பலரும் உரையாற்றி பயனுள்ள கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்கள். அத்துடன் வெளிநாடுகள் பலவற்றிலும் இருந்து பலர் இணையவழி ஊடாகவும் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்கள்.

தொடர்ந்து எதிர்வரும் October 10ம் திகதி 11ம் திகதி மற்றும் 12ம் திகதி ஆகிய மூன்று நாட்களும் University of Toronto Scarborough மற்றும் Scarborough கொன்வென்சன் சென்றர் விழா மண்டபம் ஆகியவற்றில் நடைபெறவுள்ள “இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான வாய்ப்புகள் - 2025”, என்னும் தலைப்பிலான மாநாடு வெற்றிபெற அனைவரும் சேர்ந்து உழைப்போம் என்ற உறுதிமொழியுடன் கூட்டம் நிறைவுற்றது.








# கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் ஐரோப்பிய ஒன்றியம் நடத்தும் "52வது ஆண்டு எழுச்சி மாநாடு மற்றும் செந்தமிழ் கலை மாலை — 2025"

தற்போது கனடா வாழ் சிவா கணபதிப்பிள்ளை அவர்களைத் தலைவராகவும் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அவர்களை செயலாளர் நாயகமாகவும் கொண்டு கனடாவைத் தலைமையகமாகவும் பிரதான செயற்பாட்டு தேசமாகசுவும் இயங்கிவரும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின்ஹ ஐரோப்பிய ஒன்றியம் நடத்தும் “52வது ஆண்டு எழுச்சி மாநாடு மற்றும் செந்தமிழ் கலை மாலை - 2025” எதிர்வரும் 25-10-2025 அன்று ஜேர்மனி தேசத்தின் “ரெயின்” நகரத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி மாநாடும் செந்தமிழ் கலை மாலை நிகழ்வு வெற்றிகரமாக நடைபெற கனடாவிலிருந்தும் உலகின் பல நாடுகளிலிருந்தும் பல நீண்ட கால உறுப்பினர்களும் இயக்கத்தின் தூண்களாக விளங்குகின்றவர்களும் தங்கள் வாழ்த்துச் செய்திகளை அனுப்பி வைத்துள்ளார்கள்.

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் காப்பாளராக விளங்கும் கனடா வாழ் பேராசிரியர் இ. பாலசுந்தரம். இயக்கத்தின் அகிலத் தலைவர் சிவா கணபதிப்பிள்ளை மற்றும் இயக்கத்தின் கனடா கிளைத் தலைவரும் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான லோகன் லோகேந்திரலிங்கம் ஆகியோர் தங்கள் வாழ்த்துச் செய்திகளை விழா மலருக்காக அனுப்பி வைத்துள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

- தகவல்: சத்தியன் (கனடா)




# "மார்க்கம் நகர சபை 7ம் வட்டாரத்திற்கான இடைத் தேர்தலில் வட்டாரத்தின் முன்னாள் அங்கத்தவர்கள் பலர் எனக்கு ஆதரவு வழங்குவதை பலமாகக் கருதுகின்றேன்"

## மார்க்கம் நகரசபை இடைத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் ஆரணி முருகானந்தன் தெரிவிப்பு!



**- ரொறன்ரொவிலிருந்து லோகன் லோகேந்திரலிங்கம்**

"மார்க்கம் நகரசபையின் 7ம் வட்டாரத்திற்கு இதற்கு முன்பு அங்கத்தவர்களாக தேர்ந்தெடுக்கப்பெற்று பணியாற்றிய லோகன் கணபதி அவர்கள் மற்றும் காலிட் உஸ்மான் அவர்கள் ஆகியோர் எனக்கு ஆதரவு வழங்குவதை பலமாகவும் கருதுகின்றேன். அத்தடன் மிக விரைவில் நடைபெறவுள்ள எமது மார்க்கம் நகர சபையின் 7ம் வட்டாரத்திற்கான இடைத் தேர்தலை நடத்துவதா அல்லது கடந்த தேர்தலில் இரண்டாவது எண்ணிக்கையில் வாக்குகளைப் பெற்ற வேட்பாளருக்கு அந்தப் பதவியை வழங்குவதா என்று தடுமாறிய நிலையில் இருந்த மார்க்க நகரசபையின் தற்போதைய மேயர் மற்றும் அங்கத்தவர்கள் மத்தியில் நான் உரையாற்றுவதற்கு நேரடியாக அழைக்கப்பெற்றிருந்தேன். அங்கு எனது உரையில் பல விடயங்களை நான் சுட்டிக்காட்டினேன். இந்த இடைத் தேர்தல் நடத்தப்பெற்றால் தான் மார்க்கம் மாநகரசபையில் ஜனநாயகம் கடைப்பிடிக்கப்படுகின்றது என்பதை மக்கள் அறிவார்கள். மேலும் கடந்த தேர்தலில் இரண்டாவது எண்ணிக்கையில் வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பெற்றால் அது அடுத்து வருகின்ற தேர்தலிலும் அவரது வெறறிக்கு சாதகமாக இருக்கும். இந்த முறை ஜனநாயகத்திற்கு மாறானதாகும். எனவே தேர்தல் முறைப்படி நடத்தப்பெற வேண்டும் என்று சபை அங்கத்தவர்களுக்கு நேரடியாக வலியுறுத்தியவள் என்றவகையில் நான் பெருமிதம் அடைகின்றேன். நான் வேண்டிக் கொண்ட வகையிலும் எனது வாதத்தை அவர்கள் ஏற்றுக் கொண்ட வகையிலும் தற்போது தேர்தல் நடைபெறுகின்றது. நான் உட்பட பல வேட்பாளர்கள் போட்டியிடுகின்றோம். ஒரு வேட்பாளராக நான் மார்க்கம் நகரசபையின் 7ம் வட்டார வாக்காளப் பெருமக்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால், எனது அனுபவம் மற்றும் அரசியல் விஞ்ஞானத்தை நான் கற்றுக் கொண்டவள் என்றவகையில் ஒரு நகரசபையின் கொள்கைகளை தீர்மானிப்பது. அவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது போன்ற பல விடயங்களில் எனக்குள்ள நீண்ட கால அனுபவத்தை நான் 7ம் வட்டார அங்கத்தவராக தேர்ந்தெடுக்கப்பெற்றால் பயன்படுத்தி இந்த வட்டாரத்தின் மேம்பாட்டுக்காகவும் நன்மைகளுக்காகவும் மக்களின் நலன்களுக்காகவும் அர்ப்பணிப்பேன்".

இவ்வாறு மார்க்கம் நகரசபை இடைத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் ஆரணி முருகானந்தன் தெரிவித்துள்ளார். அண்மையில் கனடா உதயன் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேற்படி பேட்டியில் அவர் தொடர்ந்து கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கையில் பல பயனுள்ள விடயங்களையும் தனது அனுபவத்தினால் பெற்ற உயர் கல்வியினாலும் தான் வகித்த பல பதவிகளினாலும் வட்டார மக்களுக்கு சிறந்த சேவைகளை நிச்சயம் வழங்க முடியும் என்றும் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கேள்விகளுக்கு பதிலளிக்கையில் ஒரு நகரசபை அங்கத்தவர்களுக்கு பல பணிகள் உள்ளன. நகரத்தின் பாதுகாப்பு - குற்றச் செயல்களைத் தடுத்தல் - போக்குவரத்து வசதிகள்- பொதுப் போக்குவரத்தின் போது நேரத்தைச் சேமித்தல் போன்ற பல கடமைகளும் பணிகளும் உள்ளன. இவற்றையெல்லாம் கவனித்து நகரசபை அங்கத்தவராக நான் ஆற்ற வேண்டிய பல பணிகள் எனக்கு உள்ளன என்பதை நான் உறுதிபட அறிவேன். எனவே எனது இளமைக் காலம் முதல் நான் தமிழ் மக்களின் அரசியல் மற்றும் சமூகச் செயற்பாடுகளில் முன்னின்று உழைத்தவள் என்ற வகையிலும் மக்கள் போராட்டங்களில் முன்வரிசையில் நின்று உழைத்தவள் என்ற வகையிலும் எமது வட்டார மக்களிடம் எனக்குள்ள முழு உரிமையோடும் நான் கேட்டுக் கொள்கின்றேன். அத்துடன் எதிர்வரும் செப்டம்பர் 29ம் திகதி திங்கட் கிழமை நடைபெறவுள்ள மார்க்கம் நகரசபையின் 7ம் வட்டாரத்திற்கான இடைத்தேர்தலில் தங்கள் வாக்குகளை எனக்கு அளிக்கும் படியும் இயலுமானால் செப்டம்பர் 26ம் திகதி தொடக்கம் 28ம் திகதி வரை நடைபெறவுள்ள முன்வாக்குப் பதிவில் பங்குபற்றி தேர்தல் தினத்திற்கு முன்பாகவே எனக்கு தங்கள் வாக்குகளை அளிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன்" என்று தனது பேட்டியை நிறைவு செய்தார்.

---

**Advance Voting Days:**
Friday. September 26 to Sunday. September 28, 2025
10 AM to 8 PM
**Voting Day:** Monday. September 29, 2025
10 AM to 8 PM


# Thana Insurance Inc

### T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

### PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

### NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

### 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

**Thana Manickavasagar**
Insurance Broker

THANA INSURANCE Inc.



Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

**Cell : 416-728-5772**
**Office : 416-519-3896**

**"WE DO 100% ONLINE SERVICES,24/7."**



# 16 ஆண்டுகால ஐநா மைய அரசியல்: பெற்றவை? பெறாதவை?

**ஐநாவின் சான்றுகளின் அடிப்படையில் தண்டிக்கப்படுவது யார் என்றால், சில படை அதிகாரிகள்தான். இலங்கை அரசாங்கம் குற்றவாளியாக்கப்படவில்லை. இலங்கை அரசாங்கத்தை குற்றவாளியாக்குவதற்கு ஐநா இன்றுவரை தயாரில்லை. அது ஓர் அரசியல் தீர்மானந்தான். அறுபதாவது ஐநா கூட்டத் தொடரின் பின்னணியில் கடந்த 16 ஆண்டு கால தொகுக்கப்பட்ட அனுபவம் அதுதான்.**

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

கடந்த எட்டாம் திகதி இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடக வெளியீடு பின்வருமாறு கூறுகின்றது... “2025 செப்டம்பர் 08 அன்று இலங்கை குறித்த இடையூடாட்ட உரையாடலின் போது ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வில் உரையாற்றிய வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், நாட்டில் மாற்றத்தையும், அனைத்து இலங்கையர்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வை முன்னேற்றுவதற்காக புதியதொரு அரசியல் கலாச்சாரத்தையும் உருவாக்குவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு மற்றும் அரசியல் விருப்பத்தை அடிக்கோடிட்டுக் காட்டினார். தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான உள்நாட்டு செயன்முறைகள்மூலம் குறுகிய காலத்திற்குள் ஏற்பட்ட முன்னேற்றத்தை அமைச்சர் எடுத்துரைத்த அதேவேளையில், இலங்கைக்கு இந்நோக்கத்தை அடைய உரிய நேரத்தையும், அதற்கான அவகாசத்தையும் அனுமதிக்குமாறு சபையிடம் கேட்டுக்கொண்டார்.

இந்த இடையூடாட்ட உரையாடலில், பஹ்ரைன், குவைத், ஓமன், கட்டார், சவுதி அரேபியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய வளைகுடா ஒத்துழைப்பு மன்றத்தின் சார்பாக குவைத் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம், பாகிஸ்தான், எத்தியோப்பியா, ஐவரிகோஸ்ட், பிலிப்பைன்ஸ், ஜப்பான், லாவோஸ், தாய்லாந்து, வனுவாட்டு, கொரிய ஜனநாயக மக்கள் குடியரசு, எரித்திரியா, ஈரான், நேபாளம், இந்தியா, ஜிம்பாப்வே, வியட்நாம், சீனா, அஜர்பைஜான், இந்தோனேசியா, துருக்கி, பெலாரஸ், எகிப்து, வெனிசுலா, மாலத்தீவு, கியூபா, தெற்கு சூடான், சூடான், ரஷ்ய கூட்டமைப்பு மற்றும் ப்ருணடி ஆகியவை உள்ளடங்கலாக 43 நாடுகள் பங்கேற்றன. மேற்குறிப்பிட்ட நாடுகள் இலங்கையோடு தமது உணர்வுத் தோழமையை வெளிப்படுத்தியதுடன்...”

மேற்கண்டவாறு ஐநாவில் இங்கையுடன் உணர்வுத் தோழமையை வெளிப்படுத்திய நாடுகளில் ஒன்று, ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ள எரித்திரியா, ஆயுதப் போராட்டத்தின் மூலம் எதியோப்பியாவில் இருந்து விடுதலை பெற்ற ஒரு நாடு. 1980களில் ஈழத் தமிழர்கள் மத்தியில் ஆயுதம் ஏந்திப் போராடிய இயக்கங்களுக்கு ஒரு விருப்பத்துக்குரிய முன்னுதாரணமாகக் காணப்பட்டது. எரித்திரியா விடுதலைப் போராட்டத்தைப் பற்றிய கட்டுரைகளும் படங்களும் தமிழ் விடுதலை இயக்கங்களின் உத்தியோகபூர்வ இதழ்களில் பிரசுரிக்கப்படுவதுண்டு. அது பழைய கதை. இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் அறுபதாவது ஐநா கூட்டத்தொடரில் எரித்திரியா யாரோடு நிற்கின்றது?

எரித்திரியா மட்டுமல்ல அந்த நாடு யாருக்கு எதிராகப் போராடியதோ யாரிடமிருந்து விடுதலை பெற்று பிரிந்து சென்றதோ அந்த எதியோப்பியாவும் உட்பட ஒரு தொகுதி நாடுகள் நடப்பு ஐநா கூட்டத் தொடரில் இலங்கைத் தீவுக்கு ஆதரவாக நிற்கின்றன. இந்த விடயத்தில் ஒடுக்குமுறைக்கு உள்ளாகிய, போராடி விடுதலை பெற்ற கியூபா, வியட்நாம் தென் சூடான் போன்ற நாடுகள், போராடிக் கொண்டிருக்கும் ஒரு மக்கள் கூட்டத்தைத்தான் ஆதரிக்க வேண்டும். அதுதான் அறம். ஆனால் அந்த அறம் எல்லாம் ஐநாவில் கிடையாது.

ஏன் அதிகம் போவான்? பாலஸ்தீனம் இப்பொழுதும் இன அழிப்புக்கு உள்ளாகிறது. 16 ஆண்டுகளுக்கு முன்பு முள்ளிவாய்க்காலில் நடந்ததுதான் இப்பொழுது காசாவில் நடந்து கொண்டிருக்கிறது. தமிழ் மக்களில் அதிகமானவர்கள் காசாவின் பக்கம்தான். இஸ்ரேலின் பக்கம் அல்ல. ஆனால் ஒரு அதிகார சபையாக பலஸ்தீனர்கள் யாரோடு நிற்கிறார்கள்? மஹிந்தோடு நிற்கிறார்கள். 2009க்கு பின்னர்தான் பாலஸ்தீன அதிகார சபை மஹிந்தவை அங்கு விருந்தினராகக் கூப்பிட்டு அந்த நாட்டின் அதி உயர் விருதை வழங்கியது. அதுமட்டுமல்ல அவருடைய பெயரில் ஒரு வீதியையும் திறந்து வைத்தது. எனவே அரசுகள் அல்லது அரைகுறை அரசுகள் முடிவெடுக்கும் பொழுது அறத்தின் அடிப்படையில் முடிவெடுப்பதில்லை. நலன்களின் அடிப்படையில்தான் முடிவெடுக்கின்றன. நடந்து கொண்டிருக்கும் அறுபதாவது ஐநா கூட்டத்தொடரும் அதைத்தான் நிரூபிக்கின்றது.

ஐநாவின் 60ஆவது கூட்டத் தொடரின் தொடக்க நாளில் ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் வாசித்து அறிக்கையானது தமிழ் மக்களுக்கு பெரிய உற்சாகத்தைத்தரவில்லை. அவர் தமிழ் மக்களுக்கு உற்சாகமூட்டும் வார்த்தைகளை, நம்பிக்கையூட்டும் வாக்குறுதிகள் நிறைந்த வாசகங்களைக் கொண்ட ஒரு அறிக்கையை வாசிப்பார் என்று தமிழ் மக்கள் எதிர்பார்த்து இருந்திருந்தால் அது தமிழ் மக்களின் தவறுதான். ஏனென்றால் ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் ஒரு ராஜதந்திரி. அவரை ஒரு மனித உரிமைக் காவலர் என்று நம்பினால் அது தமிழ் மக்களுடைய தவறு. அவர் ஒரு மனித உரிமைக் காவலராக இருந்திருந்தால் காசாவில் நடப்பவற்றை ஏன் தடுக்க முடியாதிருக்கிறார்? காசாவில் நடப்பவற்றைத் தடுக்கும் சக்தியற்ற, கையாலாகாத ஒரு உலகப் பொது நிறுவனமாகத்தான் ஐநா காணப்படுகிறது. எப்படி 2009இல் முள்ளிவாய்க்கால் படுகொலையின்போது ஐநா காணப்பட்டதோ, எப்படி 1996ஆம் ஆண்டு கிழக்கு ஐரோப்பாவில் செப்ரெனிகாவில் ஐநா இன அழிப்பின் கையாலாகாத சாட்சியாக பேசாமல் நின்றதோ, அப்படித்தான் இப்பொழுது காசாவிலும் நிற்கின்றது.

எனவே மனித உரிமைகள் ஆணையாளரை மனித உரிமைகளைக் காப்பாற்றும் ஒரு தேவதையாகப் பார்ப்பதே தவறு. அவர் முதலாவதும் கடைசியுமாக ஒரு ராஜதந்திரி. மேலும் ஐநாவில் மனித உரிமைகள் எனப்படுகின்றவை மேற்கு நாடுகளால் கையாள முடியாத அரசுகளை நெருக்குவதற்கான உபகரணங்கள்தான். எனவே ஐநா ஐநாவின் மனித உரிமைகள் ஆணையகத்தை அதற்குள்ள வரையறுக்கப்பட்ட ஆணைக்கூடாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

கடந்த 16 ஆண்டுகளாக இலங்கையில் பொறுப்புக்கூறல் விடயத்தில் ஐநா தொடர்ச்சியாக ஒரே அணுகுமுறையைக் கொண்டிருக்கிறது. அது என்னவென்றால் நாட்டில் ஆட்சி மாற்றங்கள் ஏற்படும் பொழுது அந்த ஆட்சி மாற்றங்களுக்கூடாக பொறுப்புக்கூறலை எப்படிக் கொஞ்சமாவது நிறைவேற்றலாமா என்று முயற்சிப்பது. இது உண்மையில் ஐநாவிடம் உள்ள நப்பாசை அல்ல. மாறாக ஈழத்தமிழ் அரசியலை எங்கு பெட்டிகட்டி வைக்க வேண்டும் என்ற ஓர் அரசியல் தீர்மானத்தின் அடிப்படையிலான ஓர் அணுகுமுறைதான். ராஜதந்திர அணுகுமுறைதான்.

இலங்கையில் மேற்கு நாடுகளுக்குச் சாதகமான அல்லது மேற்கு நாடுகளால் கையாளப்படத்தக்க ஆட்சி மாற்றங்கள் ஏற்படும்பொழுது புதிய அரசாங்கங்களுக்கு ஊடாக பொறுப்பு கூறலை எப்படி முன்னெடுக்கலாம் என்று தான் ஐநா சிந்திக்கின்றது. அதிலும் குறிப்பாக முக்கியமாக பொறுப்புக்கூறத் தயாரில்லாத இலங்கை அரசாங்கங்களின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க அல்லது தண்டிக்க ஐநா தயாரில்லை. அவ்வாறு தயாரில்லை என்ற அரசியல் தீர்மானம் காரணமாகத்தான் குறிப்பிட்ட அரசாங்கங்களின் மீது அழுத்தங்களை அல்லது தடைகளை பிரயோகிக்கக்கூடிய ஆணையைக் கொண்டிராத மனித உரிமைகள் பேரவைக்குள் இலங்கை இனப்பிரச்சினை பெட்டி கட்டப்பட்டிருக்கிறது. அது ஒரு அரசியல் தீர்மானம். உலகளாவிய ஓர் அரசியல் தீர்மானம்.

இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் கடந்த 16 ஆண்டுகளாக இலங்கை இனப் பிரச்சனையானது மனித உரிமைகள் பேரவைக்குள் பெட்டி கட்டப்பட்டிருக்கிறது. 2021ஆம் ஆண்டுத் தீர்மானத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்கும் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான அலுவலகம்தான் இந்த 16 ஆண்டுகளிலும் கிடைத்த குறிப்பிட்டுச் செல்லக்கூடிய அடைவு. ஆனால் அதிலும் கேள்விகள் உண்டு.

அங்கே சேகரிக்கப்படுகிற சான்றுகளும் சாட்சிகளும் பொருத்தமான சட்ட ஏற்பாடுகள் ஊடாகப் பொருத்தமான அனைத்துலக நீதிமன்றங்களை நோக்கி நகர்த்தப்படுமா என்ற கேள்வியை கஜேந்திரகுமார் கேட்டிருக்கிறார். அதில் தன்னுடைய சொந்த சாட்சியத்தை ஐநா கையாண்ட விதம் தொடர்பாகவும் அவர் சந்தேகங்களை எழுப்பியிருந்தார். ஐநாவிற்குக் கூட்டுக் கடிதம் எழுதுவதற்காக டில்கோ ஹோட்டலில் கூடிய கூட்டத்தில் அவர் அதைத் தெரிவித்தார்.

ஆனால் ஐநாவை ஆதரிப்பவர்களும் நிலைமாறு கால நீதியின் ஆதரவாளர்களும் கூறுகிறார்கள், அந்தச் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிக்கும் அலுவலகத்தில் உள்ள தகவல்களின் அடிப்படையில்தான் அமெரிக்கா, கனடா, பிரித்தானியா போன்ற நாடுகள் குறிப்பிட்ட சில படை அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்திருப்பதாக.

ஆனால் இந்த நடவடிக்கைகள் இலங்கை அரசு கட்டமைப்புக்கு எதிரானவை அல்ல. அதாவது யுத்தத்தை நடத்திய, இன அழிப்பை ஓர் அரசுக் கொள்கையாகக் கொண்ட அரசுக் கட்டமைப்புக்கு எதிரானவை அல்ல. மாறாக அந்த அரசக் கட்டமைப்பின் ஆணையை ஏற்றுப் போரை முன்னெடுத்த சில தளபதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் எதிரானவைதான். எனவே ஐநாவின் சான்றுகளின் அடிப்படையில் தண்டிக்கப்படுவது யார் என்றால், சில படை அதிகாரிகள்தான். இலங்கை அரசாங்கம் குற்றவாளியாக்கப்படவில்லை. இலங்கை அரசாங்கத்தை குற்றவாளியாக்குவதற்கு ஐநா இன்றுவரை தயாரில்லை. அது ஓர் அரசியல் தீர்மானந்தான். அறுபதாவது ஐநா கூட்டத் தொடரின் பின்னணியில் கடந்த 16 ஆண்டு கால தொகுக்கப்பட்ட அனுபவம் அதுதான்.

---

**வீணாவின் கவிக்கணை**

எதிலும்
பயம் கொண்டு
புறம் நின்று
நீ
வெருண்டு ஓடாதே,
உன்
திறம் கொண்டு
அதன்
எதிர் நின்று
உன் பயத்தை
துரத்தி அடித்து
வெற்றி காண்பாயே!



# அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய பளுதூக்கல் போட்டியில் மன்னார் சித்திவிநாயகர் இந்து கல்லூரி மாணவி சம்சிக்கா தங்கப் பதக்கம் வென்றார்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்



(16-09-2025)

அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான தேசிய மட்ட 15 வயது பிரிவுக்குட்பட்ட பெண்களுக்கான பளுதூக்குதல் போட்டியில் வடமாகாணம் சார்பாக மன்னார் சித்திவிநாயகர் இந்து கல்லூரியின் மாணவி செல்வி சம்சிக்கா சத்தியசீலன் கலந்து கொண்டு தங்கப்பதக்கம் பெற்றுக்கொண்டார்.

மன்னார் தாழ்வுபாடு கிராமத்தைச் சேர்ந்த குறித்த மாணவி தேசிய மட்டத்திலான பளு தூக்கும் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய முதல் பெண் மணியாகவும் இவர் விளங்குகிறார்.

இவரது பயிற்றுவிப்பாளராக மாவட்ட மெய்வல்லுனர் பயிற்றுனர் ஜூலியட் சிலிடாஸ் (Juliet cilitas) செயல்பட்டுள்ளார்.

குறித்த மாணவி மன்னார் மாவட்டத்திற்கும், பாடசாலைக்கும் பெருமையை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

# "இலங்கையில் தேசிய சிறை கைதிகள் தினத்தை முன்னிட்டு நாம் விடுதலை செய்யப்படுவோம் என நினைத்தோம் ஆனால் அது நிறைவேறவில்லை"

## தமிழ் அரசியல் கைதிகள் கவலை தெரிவிப்பு!



தேசிய சிறை கைதிகள் தினம் 12ஆம் திகதி கடைபிடிக்கப்படுகின்றது. இந்த தினத்தை முன்னிட்டு குடும்ப சந்திப்புகள் இடம்பெறுகின்றமை வழமை.

அந்தவகையில் அரசியல் கைதி ஆனந்தசுதாகரனின் தாயார், 28 வருடங்களாக சிறையில் வாடும் அரசியல் கைதியான இராமச்சந்திரனின் குடும்பத்தினர், குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினர் ஆகியோர் குறித்த சிறை கைதிகளை 15ம் திகதி திங்கட்கிழமை அன்றையதினம் பார்வையிட்டனர்.

இதன்போது இராமச்சந்திரனின் பேரப்பிள்ளைகளைகளான சிறுவர்களும் சிறைக்குள் சென்று அவரை பார்க்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின்போது அரசியல் கைதிகளின் விடுதலைக்கான விடுதலை நீரை ஆனந்தசுதாகரன் வழங்கி வைத்தார்.

மேலும், இதனால் இந்த ஆண்டு அரசியல் கைதிகள் தினத்துக்கு தமது விடுதலை கைகூடும் என நினைத்தபோதும் அது நிறைவேறவில்லை என்றும், இந்த அரசாங்கம் தங்களை நிச்சயம் விடுதலை செய்யும் என தாங்கள் நம்புவதாக அவர்கள் தம்மை பார்க்க சென்றவர்களிடம் தெரிவித்தனர்.




# கிளீன் ஶ்ரீலங்கா திட்டத்தின் கீழ் யாழ் மாவட்ட செயலகமும் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகமும் இணைந்து சங்கானையில் நடத்திய நடமாடும் சேவை!

கிளீன் ஶ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகமும் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகமும் இணைந்து நடத்துகின்ற நடமாடும் சேவை 16ம் திகதி செவ்வாய்கிழமை அன்றையதினம் சங்கானைப் பிரதேச செயலகத்தில் காலை 8.30 தொடக்கம் மாலை 3.00 மணிவரை இடம்பெற்றது.

இந்த நடமாடும் சேவையில் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தின் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டு நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்தனர்.

இதன்போது ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள், ஓய்வூதியம் தொடர்பான சேவைகள், பிறப்பு, இறப்பு மற்றும் உத்தேச வயது சான்றிதழ்கள் தொடர்பான சேவைகள், மோட்டார் வாகன பதிவு மற்றும் வாகன வருமான அனுமதிப்பத்திரம் தொடர்பான சேவைகள், பிரதேச சபைகளால் வழங்கப்படும் சேவைகள், பொலிஸ் திணைக்களத்தினால் வழங்கப் படும் சேவைகள், மனிதவள அபிவிருத்தி தொடர்பான சேவைகள் மற்றும் தொழில் வழிகாட்டல்கள், திறன் அபிவிருத்தி தொடர்பான சேவைகள் மற்றும் தொழிற்கல்வி வழிகாட்டல்கள் (NVQ), சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள், முதியோர் தேசிய செயலகத்தினால் வழங்கப்படும் சேவைகள், காணி தொடர்பான சேவைகள், மருத்துவ முகாம் - பொது மருத்துவ பரிசோதனை, கண்புரை பரிசோதனை (Cataract), இலவச மூக்குக்கண்ணாடி வழங்குதல் (வறியவர்களுக்கு) போன்ற சேவைகள் இந்த நடமாடும் சேவையின்போது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





இந்த நடமாடும் சேவையில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சேவையை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் மாமனிதர் துரைராஜாவின் உருவச் சிலை நிறுவ தீர்மானம்!



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் மாமனிதர் துரைராஜாவின் உருவச் சிலையினை திருநெல்வேலிச் சந்தியில் நிறுவுவதற்கு நல்லூர் பிரதேச சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் மாமனிதர் பேராசிரியர் துரைராஜாவுக்கு சிலை ஒன்றினை அமைப்பதற்கு இடமொன்றினை ஒதுக்குவது தொடர்பில் 18ம் திகதி வியாழக்கிழமை அன்றைய தினம் நடைபெற்ற நல்லூர் பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தில் தவிசாளர் மயூரனால் அறிவிக்கப்பட்டது.

தவிசாளர் தனது உரையில் தெரிவிக்கையில், போலிகள் மலிந்து விட்ட இன்றைய தேசத்தில் போலியின்றி வாழ்ந்து தேசப்பற்றோடும் மக்கள் மனித நேயத்தோடும் தமிழ் மண்ணுக்கு மக்களுக்கும் அவர் ஆற்றிய மகத்தான தன்னலமற்று பணியாற்றியவர். அவரது அறிவியல், பண்பியல், வாழ்வியல் என்பன இந்த மண்ணின் ஒரு வரலாறு அடையாளம்.

அவ்வாறனவர்கள் இந்த மண்ணில் வாழ்ந்தார்கள் என்பதனை எமது அடுத்த தலைமுறைக்கு சொல்லவேண்டியதும் இப்படியானவர்களை எமது இளைய தலைமுறையினர் தங்களது வாழ்வியலுக்கான வழிகாட்டியாக பின்பற்றவேண்டும் என்பதன் அடிப்படையில் நல்லூர் பிரதேச சபை இவ் உயரிய பணியினை மேற்கொள்ளுகின்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்த காரணத்தினால் யாழ். பல்கலைக்கழக சூழலில் அவருடைய சிலையினை நிறுவுவதற்கான இடத்தினை ஒதுக்க வேண்மென்பதன் அடிப்படையில் ஒரு பொருத்தமான இடத்தினை தெரிவு செய்யவேண்டும். அந்த வகையில் திருநெல்வேலிச் சந்தியில் நல்லூர் பிரதேச சபையினால் அமைக்கப்பட்ட மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில் அல்லது யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு முன்னால் உள்ள நடைபாதைக்கு அருகில் இச் சிலையினை நிறுவுவதற்கான இடமாக தெரிவு செய்யலாம் என்று தெரிவித்தார்.

திருநெல்வேலிச் சந்தியில் நல்லூர் பிரதேச சபையினால் அமைக்கப்பட்ட மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில் மாமனிதர் துரைராஜாவின் சிலையினை நிறுவுவதற்கான பொருத்தமான இடமென சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

# இனிமேல் சபையை நான் கடுமையாகவே நடத்துவேன்

## உறுப்பினர்கள் மீது பாய்ந்த மானிப்பாய் பிரதேச சபை தவிசாளர்!



சம்பவத்தை அறிந்து கொண்ட அப்பகுதியின் வரியிறுப்பாளர்கள் பலர் பிரதேச சபையின் வளாகத்திற்குள் வந்து ஹ ஹஹஇவர்கள் சண்டை பிடிக்கவா நாம் எமது வாக்குகளை அளித்து தெரிவு செய்தோம்? ஹஹஎன்று உரத்துச் சத்தமிட்டனர்.

மானிப்பாய் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு 18ம் திகதி அன்றையதினம் வியாழக்கிழமை தவிசாளர் ஜெசீதன் தலைமையில் நடைபெற்றது.

அமர்வில், மானிப்பாய் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட சந்தைகளின் அபிவிருத்தி தொடர்பாக விவாதம் எழுந்தது. இதன்போது உறுப்பினர்களிடையே கடுமையான வாக்குவாதம் இடம்பெற்றது. இதனால் சபை தவிசாளரின் கட்டுப்பாட்டை மீறியது.

இந்நிலையில் திடீரென கோபமடைந்த தவிசாளர், இனி சபையை கடுமையாக நடாத்த வேண்டிய தேவை ஏற்படும். கதைப்பதற்கு இனி அனுமதி தர முடியாது. திருப்பி எதிர்த்து கதைக்காதீர்கள் என உறுப்பினர்கள் மீது பாய்ந்தார்.

இதன்போது உறுப்பினர்கள், எமக்கு கதைப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும். கதைப்பதற்கு அனுமதி வழங்க முடியாது என நீங்கள் கூற முடியாது என்றனர். இதன்போது சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

இந்த சம்பவத்தை அறிந்து கொண்ட அப்பகுதியின் வரியிறுப்பாளர்கள் பலர் பிரதேச சபையின் வளாகத்திற்குள் வந்து ஹ இவர்கள் சண்டை பிடிக்கவா நாம் எமது வாக்குகளை அளித்து தெரிவு செய்தோம்? என்று உரத்துச் சத்தமிட்டதாகவும் அறியப்படுகின்றது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இருதய சத்திர சிகிச்சைப் பிரிவு வைபவரீதியாக திறந்து வைக்கப்பெற்றது

கனகராசா சரவணன்



மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சுகாதார சேவை உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்து நோக்குடன் இலங்கை ஜனநாயக சோசியலிச குடியரசின் மக்கள் வரிப்பணத்தில் நிர்மாணிக்கப்பட்ட இருதயவியல் பிரிவு கட்டிடம் 18ம் திகதி வியாழக்கிழமை அன்று உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ அவர்களின் பங்கேற்புடன் வியாழக்கிழமை அன்று (18) திகதி பொதுமக்கள் பாவனைக்காக உத்தியோபூர்வமாக திறந்து வைக்கப்பட்ட நிகழ்வு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கணேசமூர்த்தி கலாரஞ்சனி அவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

324 மில்லியன் செலவில் நிர்மானிக்கப்பட்ட குறித்த கட்டடத் தொகுதியின் திறப்பு விழா நிகழ்விற்கு கிழக்கு மாகாண ஆளுனர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்ணசேகர, பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர்.





இருதய சத்திர சிகிச்சைப் பிரிவுடன், எண்டோஸ்கோபி பிரிவும் புனரமைப்பு செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் போதனா வைத்தியசாலையின் பிரதிப்பணிப் பாளர்கள், வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் என வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இவ் வைத்தியசாலையின் குறைபாடாக திகழ்ந்து வரும் MRI பிரிவு எதிர்வரும் தை மாதம் அளவில் திறந்து வைக்கப்படுமெனவும், சுகாதார துறைசார்ந்த 17 பாரிய திட்டங்களுக்கான அனுமதியினை கடந்த அமைச்சரவை அமர்வில் சமர்பித்து அவற்றிற்கும் நாம் அனுமதியினை பெற்றுள்ளோம் அவற்றின் ஊடாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவும் கட்டட குறைபாடுகள் உள்ளிட்ட அனைத்து விடையங்களையும் நாம் பூர்த்தி செய்துதருவோம் எனவும் இதன் போது அமைச்சர் தனது உரையில் தெரிவித்திருந்தார்.

நிகழ்வின் இறுதியில் அமைச்சர் உள்ளிட்ட அதிதிகள் பொன்னாடை போர்க்கப்பெற்று நினைவுச் சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு எதிரான பிரேரணையை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரித்து கைஉயர்த்தியிருக்க வேண்டும்

## ஏன் அவர்கள் மௌனம் காத்தார்கள் என - கி.மா.சபை முன்னாள் உறுப்பினர் இரா. துரைரெட்ணம் கடும் கண்டனம்




கடந்தகால ஜனாதிபதிகளுக்கு எதிராக பாராளுமன்றத்தில் கொண்டு வந்த பிரேரணை க்கு எதிர்த்து வாக்களிக்க வேண்டிய சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதிகள் ஏன் மௌனம் காக்கவேண்டும் என தமிழ் மக்கள் மத்தியில் கேள்வி எழுந்துள்ளது என தமிழ் பிரதிநிதிகள் பதில் சொல்லி ஆகவேண்டும் என ஈ.பி,ஈர். எல்.எப் மத்திய குழு உறுப்பினரும் கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினருமான இரா. துரைரெட்ணம் வன்மை கண்டனம் தெரிவித்துள்ளார் கடந்த 16ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புதிய அரசாங்கம் கடந்த ஜனாதிபதிகள் சிறப்பு உரிமைகளின் கீழ் மக்களின் வரிப்பணத்தில் சுகபோகவாழ்கையில் ஈடுபடமுடியாது ஊழல் மோசடி துஸ்பிரயோகத்துக்கு எதிராக பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணை அதிகூடிய வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த நிலையில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களை கடந்த கால ஜனாதிபதிகளாக இருந்தவர்கள் இனபடுகொலை புரிந்துள்ளதுடன் இனப்பிரச்சனை தொடர்பாக எந்த தீர்வும் முன்வைக்கப்படவில்லை மட்டுமல்ல மக்களின் விரிப்பணத்தை அறவிட்டு அந்த வரிப்பணத்தில் இருந்து துஸ்பிரயோம் செய்து வந்ததற்கு எதிராக கொண்டு வரப்பட்டு பாராளுமன்றத்தில் முன்வைக்கும் போது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அந்த பிரேரணையை ஆதரித்து வாக்களிக்க வேண்டியது அவர்களது இறைமையாகும்.

ஆனால் சிறுபான்மை கட்சிகளைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் ஏன்? மௌனம் காக்க வேண்டும் என வடகிழக்கு தமிழ் மக்கள் மற்றும் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வி மிக உச்சகட்டத்துக்கு வந்துள்ளது எனவே தமிழ் பிரதிநிதிகள் பதில் சொல்லி ஆகவேண்டும்.

அதேவேளை தமிழ்கள் இன பிரச்சனை தொடர்பாக இந்த புதிய அரசு எந்த வசனத்தையோ அதிகார பங்கீடு தொடர்பாக எந்த விடையத்தையும் பேசுவதில்லை எனவே மாகாணசபை தேர்தலை நடாத்துவதற்கு பாராளுமன்றத்தில் பிரேரணைகளை கொண்டுவந்து அதனை மிக விரைவாக நடாத்த வேண்டும்.

மாகாணசபை அமுல்படுத்தப்பட்ட காலங்களில் மக்களின் காலடிக்கு நேரடியாக அதிகாரத்தை கொண்டுபோககூடிய ஒரு சூழல் இருந்தது இந்த மாகாணசபை முறைமை தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கே முஸ்லீம் மக்களுக்கே மட்டுமல்ல நாட்டில் உள்ள அனைத்து மக்களும் மாகாணசபையால் நன்மை பெற்று இருக்கின்றார்கள் என்பது கடந்த கால யதார்த்தமாகும்.

தென்னிலங்கையில் மாகாணசபையில் 60 க்கு மேற்பட்ட நியதிச் சட்டங்களை உருவாக்கி மாகாண சபை அதிகாரங்களை கொண்டு திறம்பட செயற்பட்டது இதனால் அதிகூடிய நன்மை பெற்றது சிங்கள மக்களே என்பதை இந்த அரசு மறந்துவிடக் கூடாது இது தமிழருக்கு தாரைவாத்து கொடுக்கப்பட்ட விடையமல்ல ஆனால் மக்களுக்கு நேரடியாக அதிகாரத்தை கொண்டு செல்வதற்கான வழி முறை அது இந்த மாகாணசபை முறையே எனவே இதனை அமுல்படுத்தப்படுவதால் மக்கள் சில நன்மைபெற கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றது.

வடக்கு கிழக்கில் சில உப விதிகளை தயாரித்து அதை அமுல்படுத்தும் போது தானாக சில அதிகாரங்களை பெறக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றது அந்த வாய்ப்புக்களை இந்த புதிய அரசு தமிழ் மக்களுக்கு எந்தவித துரோகமும் செய்யாமல் ஏமாற்றாமல் வழங்கவேண்டும் கடந்த 50 வருடமாக ஜனநாயகத்தை சுதந்திரத்தை, அதிகார பங்கீட்டை பெறுவதற்காக ஆயுதங்களை தூக்கிய இதே தமிழர்களை போல ஜே.வி.பியும் இந்த போராட்டத்தில் மேற்கொண்டிருந்தன அவர்களின் உரிமைனகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமாயின் எங்களின் உரிமைகளை அவர்கள் ஏற்கொண்டே ஆகவேண்டும் நாங்கள் பயங்கரவாதிகள் அல்ல என நிரூபிப்பதற்காக புதிய அரசு மாகாணசபை முறைமைகளை செயற்படுத்தி கொடுப்பார்கள் என நம்புகின்நோம்.

மாகாணசபை முறைமையை பொறுத்தமட்டில் மக்களின் கைகளில் வீடு வீடாக அதிகாரம் செல்ல வெண்டுமாயின் பல நியதி சட்டங்களை உருவாக்குகின்ற பொறுப்பு இருக்கின்றது ஏற்கனவே கிழக்கில் 5 நியதிசட்டம் உருவாக்கப்பட்டிருந்தது இன்னும் 66 நியதிசட்டம் உருவாக்கும் வாய்ப்புக்கள் இருந்தது அதனை உருவாக்கினால் அதிகாரங்கள் மக்களுக்கு சென்றடையும்.

கிழக்கு மாகாணத்தில் 40 வீதம் தமிழ்ர்கள் 36 வீதம் முஸ்லீம்கள் 23 வீதம் சிங்களவரும் வாழுகின்ற கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மையாக தமிழர்கள் வாழ்கின்றனர் எனவே 37 மாாணசபை உறுப்பினர்களை கொண்ட சபையில் 18 க்கு மேற்பட்ட உறுப்பினர்களை பெரும்பான்மையாக ஒரு கட்சி பெறும் பட்சத்தில் அவர்கள் ஆட்சியை அமைக்க முடியம்.

அந்த நேரத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழர் ஒருவர் முதலமைச்சாரக வரவேண்டு மாயின் கிழக்கு மாகாணத்தில் இருக்கும் தமிழ் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஓரணில் நின்று தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் தமிழர் ஒருவரை முதலமைச்சராக பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு இருக்கின்ற வாக்குகள் வேறு தரப்புக்கு விளக்கூடிய இன்று உள்ள சூழ்நிலையில் அதவாவது ஏற்கனவே பாராளுமன்ற தேர்தல் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் வேறு வேறு பிரதிநித்துவ கட்சிகளும் தேசிய கட்சிகளும் தமிழ் பிரதிநிதித்துவத்தை பெற்றுள்ளனர்.

இந்த சூழ்நிலையில் தமிழ் கட்சிகள் பிரிந்து கேட்பார்கள் ஆனால் தமிழர்களின் முதலமைச்சருக்கு கேள்விக்குறியை உண்டாக்குவதற்கு தமிழ் கட்சிகள் வழி அமைக்காது என நம்புகின்றென் எனவே கிழக்கு மாகாணத்தில் தமிழர் ஒருவர் முதலமைச்சராக வரவேண்டுமாயின் தமிழர்கள் ஒன்று சோந்து கேட்கும் பட்சத்தில் வரமுடியும் என்றார்.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies
மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches
நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer
மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation
உடற்பருமன் குறைத்தல் | Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

# TK DESIGN STUDIO

## Architecture | Interior | Graphics

### Our Services

- Architectural Design & Solutions
- Interior Design & Material Selection
- Graphic Designing (Posters, Invitations, Video Ads)
- 2D Planning & 3D Visualization
- Resume & Logo Design





Contact: Tel: +1(942) 380-1165
Email: tkdesignstudio03@gmail.com
Instagram: @tkdesignstudio1

# தமிழரின் ஆணித்தரமான குரல்
# ஆரணி முருகானந்தன்




பல்லின சமூக ஆதரவு




**Paul Chiang**
Former Member of Parliament



**Khalid Usman**
Former City Councillor,
Ward 7 - Markham



**Sam Erry**
Corporate Executive
Long-time Markham Resident



**Andrew Keyes**
City Councillor,
Ward 5 - Markham



**Tessa Benn-Ireland**
Former Justice of the Peace
Former Tustee, YRDSB

**7ம் வட்டாரத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் காக்க**
**வாக்குகள் சிதறாது ஆரணிக்கு வாக்களியுங்கள்.**

உங்கள் ஆதரவை வழங்க தொடர்பு கொள்ளுங்கள் (647) 517 2390 | vote@araneeward7.ca

Elect
# Zakir Patel
FOR SCARBOROUGH – ROUGE PARK

*Getting Things Done!*

Scarborough Rouge Park
தொகுதிக்கான பலமானதும்
நம்பிக்கையுடையதுமான குரல்!



## ADVANCE POLLS
**சனிக்கிழமை செப்டம்பர் 20**
மற்றும்
**ஞாயிற்றுக்கிழமை செப்டம்பர் 21**
காலை 10.00 மணி தொடக்கம்
இரவு 7.00 மணிவரை

## ELECTION DAY
**திங்கட்கிழமை செப்டம்பர் 29**
காலை 10.00 மணி தொடக்கம்
இரவு 8.00 மணிவரை


**தலைமைத்துவம், சேவை மற்றும் கடமை உணர்வு ஆகியன**

**Public Service Leadership Roles:**
✓ Vice-Chair - Toronto District School Board (TDSB)
✓ Chair - Finance, Budget & Enrollment Committee, TDSB
✓ Member - Special Education Advisory Committee, TDSB

**Community & Volunteer Involvement:**
✓ Secretary - Scarborough Cricket Association
✓ Volunteer - Scarborough Health Network (SHN)
Scarborough Muslim Community

**Recognition & Achievements:**
✓ Urban - Hero Award - Metroland Media
Recognized for Pandemic Community Support
✓ Remarkable Father's Award
Nigerian Canadian Newspaper Canada


Need ride to vote, please call:
437 267 6843
647 249 8528




HOW YOU CAN HELP?
- Volunteer
- Reqest a lawn sign
- Make a donation

செப்டம்பர் 29 அன்று சாகிர் பட்டேல் அவர்களுக்கு
25ம் வட்டார நகரத்தின் அங்கத்தவராக தேர்ந்தெடுக்க வாக்களியுங்கள்

647-249-8528 | info@votezakir.ca | www.votezakir.ca | zakir4rouge



# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

NESAN
416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

WE DEAL WITH ALL BANKS

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# உரும்பிராயில் வைத்தியர் மீது தாக்குதல் நடாத்திய இருவர் கைது!

யாழ்ப்பாணம் - உரும்பிராய் பகுதியில் வீதியில் பயணித்த வைத்தியர் மீது தாக்குதல் மேற்கொண்ட இருவரை பொலிஸார் விடுவித்த சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இது குறித்து ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்த நிலையில் இருவர் 18ம் திகதி வியாழக்கிழமை அன்று மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், 17ம் திகதி புதன்கிழமை அன்றிரவு கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உரும்பிராய் பகுதியில் வீதியால் வைத்தியர் ஒருவர் சென்றுகொண்டிருந்தார். இதன்போது மதுபோதையில் இருந்த ஒரு குழுவினர் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வீதியில் நின்றனர்.

இதன்போது குறித்த வைத்தியர் தான் செல்வதற்கு வழிவிடுமாறு கூறியவேளை அவர்மீது அங்கிருந்த கும்பல் தாக்குதல் நடாத்தியது. தாக்குதலுக்கு உள்ளாகி காயமடைந்த வைத்தியர் இதுகுறித்து கோப்பாய் பொலிஸாருக்கு தெரியப்படுத்தினார்.

இதன்போது அங்கு வந்த கோப்பாய் பொலிஸார் இருவரை கைது செய்த நிலையில் ஏனையோர் தப்பிச் சென்றனர். பின்னர் குறித்த வைத்தியர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்ப்பிக்கப்பட்டார்.

இவ்வாறு கைது செய்த இருவரையும் விடுவிக்குமாறு கோப்பாய் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி கூறியமைக்கு அமைவாக பிணை எதுவுமின்றி அவர்கள் இருவரையும் விடுதலை செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து செய்திகள் வெளிவந்த நிலையிலேயே தாக்குதல் நடாத்திய சந்தேகநபர்கள் இருவரும் மீண்டும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# எமது படைப்பாளிகள் தென்னிலங்கைப் படைப்பாளிகளுடன் உரையாடல்களை மேற்கொள்வது அவசியம் என அழைப்பு விடுத்துள்ள பொ. ஐங்கரநேசன்!



தென்னிலங்கைக் கலை, இலக்கியவாதிகளில் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடுகளை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் வெகு சிலரே. பெரும்பாலானோர் தமது படைப்புகளில் எதிரான நிலைப்பாடுகளையே வெளிப்படுத்தி வருகின்றனர். சிங்களக் கலை, இலக்கிய உலகில் முற்போக்கு எழுத்தாளராகக் கருதப்படும் குணசேன விதான தனது சிறுகதை ஒன்றில் விடுதலைப்புலிகள் சகபோராளி ஒருவரின் சடலத்துக்குப் பதிலாக இரண்டு வாழைத்தண்டுகளைக் கொண்ட சவப்பெட்டியைப் பெற்றோரிடம் கையளித்து, பெட்டியைத் திறக்கக்கூடாது என்று அச்சுறுத்திச் சென்றதாகப் பதிவு செய்திருக்கிறார்.

இதுபோன்ற விசமத்தனமான படைப்புகள் சிங்கள வாசகர்கள் மத்தியில் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டம் பற்றிய தவறான புரிதல்களையே ஏற்படுத்தும். இதனை எதிர்கொள்வதற்கு, எமது படைப்பாளிகள் தென்னிலங்கைப் படைப்பாளிகளுடன் உரையாடல்களை மேற்கொள்வது அவசியம் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும், வேர்முகங்கள் நூலின் ஆசிரியருமான பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடகங்களுக்காக பொ. ஐங்கரநேசன் கலை, இலக்கிய ஆளுமைகளுடன் நிகழ்த்திய நேர்காணல்கள் வேர்முகங்கள் எனும் தொகுப்பாக வெளியாகியுள்ளது. இதன் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. இதில் ஏற்புரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், விடுதலைப் புலிகள் போராளிகளின் மரணத்தை அவர்களுடைய உறவினர்களுக்கு ஒருபோதுமே மறைத்தது கிடையாது. உரிய முறையில் உறவினர்களுக்குத் தெரியப்படுத்தி, உரிய கௌரவத்துடனேயே வித்துடல்கள் புதைக்கப்படுகின்றன. ஆனால், இலங்கை அரசாங்கம் இறந்த சிங்களச் சிப்பாய்களின் சடலங்களைக் களமுனையில் அனாதரவாக விட்டுச் சென்றதே வரலாறாக உள்ளது.

விடுதலைப் புலிகள் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு ஊடாக இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைத்த இராணுவத்தினரின் சடலங்களை அவர்கள் உலங்கு வானூர்தியில் எடுத்துச்சென்று வில்பத்துக் காட்டினுள்ளே வீசிவிட்டுச் சென்றதற்கு ஆதாரங்கள்கூட உண்டு. இதனை, தென்னிலங்கைச் சினிமாவின் சிறந்த இயக்குநரான பிரசன்ன விதானகே சிப்பாய் ஒருவரின் சடலத்துக்குப் பதிலாகப் பெற்றோரிடம் வாழைத்தண்டுகள் வைத்து மூடப்பட்ட பெட்டியே கையளிக்கப்பட்டதாக, தனது புறஹந்த களுவற என்ற படத்தில் காட்சிப்படுத்தி உள்ளார்.

எமது இளைய தலைமுறை அரசாங்கத்தால் மிகவும் நாசூக்காகத் தமிழ்த்தேசிய நீக்கம் செய்யப்படுகிறது. போராட்டம் பற்றித் தெரியாத இளைய தலைமுறை இலகுவில் இதற்குப் பலியாகியும் வருகிறது. இது ஆபத்தானது.

தேசியம் பற்றியும் போராட்டம் பற்றியும் பேசுவது அரசியல்வாதிகளுக்கு மாத்திரம் ஒதுக்கப்பட்டது அல்ல. ஒவ்வொரு துறையினரும் தங்கள் தங்கள் துறை சார்ந்து பங்களிப்புகளை நல்குவது அவசியம், போராட்டக் காலங்களில் அவ்வாறுதான் நிகழ்ந்தும் உள்ளது. எமது கலை, இலக்கியவாதிகள் வரலாற்றில் தமது பாத்திரத்தை உணர்ந்து தமிழ்த்தேசியப் போராட்டத்தின் நியாயப்பாடுகளை, வலிகளை இளைய தலைமுறைகளுக்குத் தமது படைப்புகளின் மூலம் எடுத்துச்சொல்ல முன்வரவேண்டும். படைப்பின் கலை அழகுக்கும் நேர்த்திக்கும் குறைவேதும் ஏற்படாமல் பிரச்சாரத்தொனி இல்லாமல் இவற்றைச் சொல்லவல்ல படைப்பாளிகள் பலர் எம் மத்தியில் உள்ளார்கள். அவர்களால் இது இயலும் என்று நம்புகிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

# பாரதி யார்?

எட்டயபுரம் என்ற எழில்மிகு ஊரில்
எளிமைவாழ் சின்னச் சாமிஅய்யர்
லட்சுமி அம்மாவென லட்டான தாய்க்கும்
லட்சிய மகனாக பிறந்தார்
கட்டுக் கோப்புடன் கல்வி கற்றே
கானம் பலவகை ஆக்கினார்
எட்டுத் திக்கும் இசைத்த பாடலால்
ஏற்றம் பெற்றது பாரதமே!

பாரதி என்னும் பெயரைப் பெற்றான்
பாரதம் என்ற தேசத்தில்
பாரினில் மக்கள் பண்புடன் வாழ்ந்திட
பாடல்கள் ஆயிரம் பாடினான்
தேச விடுதலை தோன்ற என்றே
தேசிய கீதங்கள் ஆக்கினார்
மாசற்ற வீர மறவனின் வாழ்வை
மாண்புடன் நாமும் வாழ்த்துமே!.


அச்சமில்லை தொடங்கி அந்திப் பொழுதும்
அக்கினிக் குஞ்சையும் ஆக்கினார்
துச்சாதனன் சபையில் திரௌபதியைப் பாடலாக்கி
துட்ட செயலெனச் சுட்டினார்
வண்டிக் காரன்பா விடுதலைக் காதலுடன்
விதுரனைத் தூது விட்டாரே!
கண்ணனென் காதலன் கதையைச் சொல்லி
கண்ணம்மா என்காதலி என்றாரே!

பாப்பாப் பாட்டும் பாஞ்சாலி சபதமும்
புதுமைப் பெண்ணையும் காட்டினார்
சாப்பாட்டுப் பஞ்சத்தை சந்தித்த போதும்
சலிக்காமல் கவிதைகள் ஆக்கினார்
பாட்டுக் கொருபுலவன் பாரதி என்பார்
பாரதி தாசனின் குருவென்பர்
பாட்டால் பாரத தேசத்தை எழச்செய்த
பாரதியார் புகழைப் பாடுவோமே!.



பிறப்பு: டிசம்பர் – 11 – 1882
இறப்பு: செப்டெம்பர் – 11 – 1921

ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்
(416) 844-7453




# இலங்கை அரசியலில் "மொட்டு" மீண்டும் மலருமா?

**"நாட்டிற்குள் அல்லது வெளியே இருந்து யாராவது ஆட்சிக் கவிழ்ப்புக்கு சதித் திட்டம் தீட்டினால் அதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என ஜனாதிபதி அநுரகுமார சூளுரைத்து முன்னாள் ஜனாதிபதி ரணில் கைது, முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் வீடு பறிப்பு என்ற அதிரடிகள் அரங்கேறும் நிலையில், எனது அரசியல் பயணம் தொடரும்.நாட்டில் மீண்டும் மஹிந்த சூறாவளி வீசும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவும் பதிலுக்கு சூளுரைத்துள்ளார்."**

------------------------------------------------------------------------ பாலா ---

இலங்கையிலே குடும்ப அரசியல் ஆதிக்கம் என்பது பெருமளவுக்கு பண்டாரநாயக்க குடும்பத்துடனேயே அடையாளப்படுத்தப்பட்ட ஒன்றாக இருந்துவந்தது. சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தை மகிந்த ராஜபக்ஷ கைப்பற்றியதையடுத்து கட்சிக்குள்ளும் ஆட்சியதிகாரத்திலும் அவரது குடும்பத்தவர்களின் அரசியல் செல்வாக்கு முன்னைய அரசியல் ஆதிக்கக் குடும்பங்கள் காட்டியிராத அளவுக்கு முனைப்புப் பெற்றது. 2005 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற உடனடியாகவே மகிந்த ராஜபக்ச தனது குடும்ப அரசியலை பலப்படுத்தினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எப்படி பண்டாரநாயக்க குடும்பத்துக்கு சொந்தமானதாகவிருந்ததோ ஐக்கிய தேசியக்கட்சி எப்படி சேனநாயக்கவின் குடும்பத்துக்கு சொந்தமானதாகவிருந்ததோ அதேபோன்றே ராஜபக்ச குடும்பத்துக்காகவே தாமரை மொட்டு சின்னத்தைக்கொண்ட பொதுஜன பெரமுன கட்சி மகிந்த ராஜபக்சவினால் உருவாக்கப்பட்டது. இந்த குடும்ப ஆட்சி 2005 ஆம் ஆண்டும் முதல் 2022 ஆம் ஆண்டுவரை இலங்கையை தமது குடும்ப சொத்தாகவே பயன்படுத்தியது.

அண்ணன் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதி, அதன்பின்னர் தம்பி கோத்தபாய ஜனாதிபதி, அண்ணன் மகிந்த பிரதமர், அடுத்த அண்ணன் சமல் ராஜபக்ச சபாநாயகர், அடுத்த தம்பி பசில் ராஜபக்ச அமைச்சர், பிரதமர் மகிந்தவின் மகன் நாமல் ராஜபக்ச அமைச்சர். சபாநாயகரின் சமல் ராஜபக்சவின் மகன் சஷீந்திர ராஜபக்ச அமைச்சர் என ஒரு குடும்பமே நாட்டை ஆட்சி செய்து கபளீகரம் செய்த நிலையில் மக்கள் புரட்சியின் மூலம் ராஜபக்ச குடும்ப அரசில் ஒழிக்கப்பட்டது. "மாற்றம்" என்ற பெயரில் சிவப்பு சட்டைக்காரர்களான ஜே .வி.பி. - தேசியமக்கள் சக்தி ஆட்சி மலர்ந்தது.

இப்போது இந்த பழைய வரலாறு ஏன் என்ற கேள்வி எழலாம். அதற்கு காரணம் உண்டு. கிட்டத்தட்ட 18 வருடங்களாக நாட்டை சூறையாடிய, தமிழ் தேசிய இனத்தை நடைபிணமாக்கி அதன் தேசிய போராட்டத்தை அழித்த, ராஜபக்ச குடும்ப ஆட்சியாளர்களாக, இனவாதிகளாக, நாட்டின் தேசிய வீரர்களாக தம்மை இனம்காட்டுவதில் பெருமையும் கர்வமும் கொண்ட அதே "ராஜபக்ச" குடும்பத்தின் "தாமரை மொட்டு" ஆட்சி மீண்டும் துளிர் விடக்கூடிய அரசியல் சூழ்நிலைகள் நாட்டில் ஏற்பட்டு வருவதனால்தான் இந்த ராஜபக்ச குடும்ப ஆட்சி தொடர்பான சிறு முன்னோட்டம்.

தமது 18 வருட குடும்ப ஆட்சியினால் நாட்டை சூறையாடி தமது குடும்பத்தை வளப்படுத்தியதனால் மக்கள் மனதில் கருகிப்போன ராஜபக்சக்களின் "தாமரை மொட்டு" ஆட்சி மீண்டும் மலருமா? அதன் மூலம் மீண்டும் ராஜபக்ச குடும்பம் நாட்டில் கோலோச்சுமா? என்ற கேள்விகளே இன்று இலங்கை அரசியலில் அதிகமாகவுள்ளன. அந்தளவுக்கு அநுரகுமார அரசின் "கிளீன் எதிரிகள்" வேட்டை தீவிரமடைந்துள்ள நிலையில் ரணில், ராஜபக்ச அனுதாப அலைகளும் மேலெழத்தொடங்கியுள்ளன.

இவ்வாறான ஒரு நிலையில்தான் அண்மைய பாராளுமன்ற அமர்வில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஒரு ஆக்ரோஷமான உரையை நிகழ்த்தி எதிர்கட்சிகளை கடுமையாக சாடியிருந்தார். ஜனாதிபதியின் இந்த ஆக்ரோஷமான உரைக்கு எதிர்க்கட்சிகள் தனது ஆட்சிக்கு கொடுக்கும் குடைச்சல்கள், முன்னெடுக்கும் பிரசாரங்கள் மட்டும் காரணமின்றி ராஜபக்சக்களின் "தாமரை மொட்டு"க்கு நாட்டில் மீண்டும் அதிகரித்துவரும் மக்கள் ஆதரவும் அது தொடர்பில் அரசுத்தரப்புக்கு கிடைத்துள்ள புலனாய்வு எச்சரிக்கைகளுமே பின்னணியில் இருந்தன.

அதனால்தான் "நாட்டிற்குள் அல்லது வெளியே இருந்து யாராவது இந்த நாட்டை கட்டியெழுப்பும் பயணத்தை சதித்திட்டங்கள்மூலம் நாசப்படுத்த முயன்றால், அவர்களை தோற்கடிக்க அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுப்போம். எனவே, ஆட்சிக் கவிழ்ப்பு சதித் திட்டம் தீட்டும் எண்ணம் வந்தாலும், அதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். பொருளாதார சரிவில் விழுவதன் மூலம் இந்த நாடு வீழ்ச்சி அடையும் என்று எதிர்க்கட்சிநினைத்தால், அது நடக்காது. சமீபத்திய காலங்களில் பொருளாதாரத்தின் மீதான அழுத்தம்காரணமாக பொருளாதாரம் சரிந்தது. பின்னர், அரசியல் நெருக்கடிகள் காரணமாக அரசாங்கங்கள் வீழ்ச்சி அடைந்தன. பொதுமக்கள் வீதிகளில் இறங்கி போராடி அரசாங்கங்கள் வீழ்ச்சி அடைந்தன. தேர்தல்கள் மூலம் அரசாங்கங்கள் வீழ்ச்சி அடைந்தன. இந்த அரசாங்கம் அந்த மூன்றுவழிகளில், எதிலும் வீழ்ச்சி அடையாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்" எனப் பேச வைத்ததுடன் "கிளீன் எதிரிகள்" வேட்டையையும் தீவிரப்படுத்த வைத்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார இவ்வாறு பேசுவதற்கு அவர் மீதும் அவரின் அரசு மீதும் மக்கள் வைத்த நம்பிக்கை வீணடிக்கப்பட்டதும் ஒரு காரணம். அதாவது ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான ஜே.வி.பி. - தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் ஜே .வி.பி.யின் கை ஓங்கி தேசிய மக்கள் சக்தியின் "திசைகாட்டி" சரியான திசை நோக்கி செயற்படத் தவறியதால் இவர்களின் "மாற்றம்" என்ற கோஷம் மீது மக்கள் வைத்த எதிர்பார்ப்பு, நம்பிக்கை வீழ்ச்சியடையத் தொடங்கியுள்ளது. அதுமட்டுமன்றி ராஜபக்சக்களின் குடும்பம் மீது குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவையும் அவரது குடும்பத்தையும் இலக்கு வைத்து அரச வீட்டைப் பறித்து மெதமுலானாவுக்கு விரட்டியமையும் முன்னாள் ஜனாதிபதி ரணில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டமையும் அநுரகுமார அரசு முன்னெடுத்து வரும் விசாரணை, கைது, விளக்கமறியல், வழக்குகள் போன்ற விடயங்களும் கொடுத்த வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றாது ஊழல். மோசடி எனக் கூறிக்கொண்டு அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுவதுமே அநுரகுமார அரசை வீழ்ச்சிப்பாதைக்கும் ராஜபக்சக்களை மீண்டும் எழுச்சிப் பாதைக்கும் கொண்டு வரத் தொடங்கியுள்ளது.

அது மட்டுமன்றி மஹிந்த ராஜபக்சவை அவரின் உத்தியோகபூர்வ அரச மாளிகையிலிருந்து வெளியேற்ற அநுரகுமார அரசு மேற்கொண்ட நடவடிக்கை. அதற்காக ராஜபக்ச குடும்பம் மீது அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட அவதூறான பிரசாரங்கள் கூட ராஜபக்ச குடும்பம் மீதான ஒரு அனுதாப அலையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி விட்டுள்ளது. ஏனெனில் எந்தவொரு ஆட்சியாளர்களை விடவும் ராஜபக்சக்கள் குறிப்பாக மஹிந்த ராஜபக்சவும் அவரது புதல்வர்களும் மக்களுடன் (சிங்கள மக்கள்) மிகவும் நெருக்கமானவர்கள். மக்களுடன் மக்களாக பழகுபவர்கள். இன்றும் மஹிந்த ராஜபக்சவுக்குள்ள மக்கள் மரியாதையை பொது இடங்களில் காண முடியும். கொழும்பிலுள்ள அரச வீட்டிலிருந்து மஹிந்த ராஜபக்ச வெளியேற்றப்பட்ட நிலையில் அவர் தனது சொந்த ஊரான மெதமுலானாவுக்கு சென்றபோது அவரை வரவேற்க வீதி வீதியாக திரண்ட மக்கள் வெள்ளம் அநுரகுமார அரசை ஆட்டம் காண வைத்துள்ளது. இவ்வாறான அநுரகுமார அரசின் ராஜபக்ச குடும்பத்திற்கு எதிரான நடவடிக்கைகள் ராஜபக்ச குடும்பத்திற்கான ஆதரவாக மக்கள் மத்தியில் மாறி வருகின்றது.

இவ்வாறான நிலையில் தான் "இலங்கையில் உள்ள பல வெளிநாட்டுத் தூதரகங்கள் நாமல் ராஜபக்சவை நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக அடையாளம் கண்டுள்ளன. சமீபத்திய தூதரக விஜயங்களின் போது நாம் சந்தித்த பல நாடுகளின் தலைவர்கள் மற்றும் இராஜதந்திரிகள், ராஜபக்சக்களின் அரசியல் எதிர்காலம் குறித்து இதேபோன்ற எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்தினர். பல்வேறு நாடுகளின் தலைவர்கள் நாமல் ராஜபக்ஸ உங்கள் தலைவர், அடுத்த ஜனாதிபதி என்று எம்மிடம் கூறினர். அதுமட்டுமன்றி பொதுமக்களுடனான கலந்துரையாடல்களில், குறிப்பாக கிராம மட்டத்தில், ராஜபக்சக்களுக்கு குறிப்பாக நாமல் ராஜபக்சவுக்கு ஆதரவு அதிகரித்து வருகின்றது என்று ராஜபக்சக்களின் "ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன"வின் முன்னாள் அமைச்சரும் முக்கிய உறுப்பினரும் ராஜபக்ச குடும்ப விசுவாசியுமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

ஒரு கட்சியாக, நாமல் ராஜபக்சவின் பயணம் சிறப்பாக முன்னேறி வருவதாக நாங்கள் நம்புகிறோம். அடுத்த ஜனாதிபதியாக அவர் வருவதைப் பற்றி கிராம மக்கள் ஏற்கனவே பேசத் தொடங்கிவிட்டனர். நாமல் ராஜபக்ஸவின் அதிகரித்து வரும் செல்வாக்கு குறித்த அச்சம் காரணமாகவே, தற்போதைய அரசாங்கம் பொய்க் குற்றச்சாட்டுகளைப் பயன்படுத்தி ராஜபக்சவினரை அவமதிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அவர்களுக்கு பயமாக இருக்கும்போது, அவர்கள் வழக்குகளைத் தாக்கல் செய்து அவரை சிறையில் அடைக்க முயற்சிக்கின்றனர். நாமல் ராஜபக்ச வருகிறார் என்பது அவர்களுக்குத் தெரியும். இது குறித்து புலனாய்வுப் பிரிவுகள் ஏற்கனவே தமது அறிக்கைகளை அரசுக்கு சமர்ப்பித்துள்ளன," என்றும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

ஆட்சி மாற்றத்துக்காக 2029 ஆம் ஆண்டுவரை காத்திருக்க வேண்டியதில்லை. அதற்கு முன்னர்கூட ஜனநாயக வழியில் அது நடக்கலாம். அடுத்த ஜனாதிபதி நாமல் ராஜபக்ச என்பது மக்களின் கருத்து என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பேச்சாளரான முன்னாள் எம்.பி. சஜ்ஜீவ எதிரிமான்ன கூறுகின்றார். ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் 4 வருடங்கள் உள்ளன என்பது உச்சபட்ச கால எல்லை. எனினும், அதற்கு முன்னர் ஆட்சியை மாற்றலாம். இலங்கையில் இதற்கு முன்னர் அப்படி நடந்தும் உள்ளது. பதவி காலம் முடியும்வரை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பயணிக்கும் என்பதற்குரிய அறிகுறிகள் இல்லை. அரசியலமைப்பு ரீதியாகக்கூட ஆட்சி மாற்றம் இடம்பெறலாம். ஜனநாயக வழியிலேயே ஆட்சி மாற்றம் நிகழக்கூடும் எனவும் அவர் கூறுகின்றார்.

இவ்வாறான சூழலில் தமிழ் தரப்பில் அர்ச்சுனா இராமநாதன் எம்.பி.யும் "நாமல் ராஜபக்சவே அடுத்த ஜனாதிபதி. அவர் ஜனாதிபதியாக நான் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவேன். இதனை நான் அவரிடம் நேரிலும் தெரிவித்துள்ளேன். அவரின் தந்தை, சித்தப்பா மார் தமிழ் மக்களுக்கு செய்த வேலைகளை அவர் தமிழ் மக்களுக்கு செய்யக்கூடாது என்றும் நேரடியாக கூறியுள்ளேன். அதற்கான உத்தரவாதத்தை அவர் எனக்கு வழங்கியுள்ளார்" என சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்து "அடுத்த ஜனாதிபதி நாமல்" என்ற எதிர்பார்ப்பை அதிகரிக்க வைத்துள்ளதுடன் அதற்கான சந்திப்புக்களில் ராஜபக்சக்கள் ஈடுபட்டுள்ளதனையும் வெளிப்படுத்தியுள்ளார்.



(தொடர்ச்சி 18 பக்கம்)

In support of Trillium Health Partners

**SENIOR TAMILS SOCIETY OF PEEL**

Join Our 23rd

# ANNUAL WALK-A-THON

## TO RAISE FUNDS FOR MISSISSAUGA HOSPITALS

**Saturday, 11th October, 2025**
9:00 AM - 1:00PM

**Yarl Co-Operative Homes**
2584 Rugby Road, ON, L5B 1J2

**Organized by Senior Tamils Society of Peel in support of Trillium Health Partners**



- STSP's Goal: To raise over $200,000 within the next eight years.
- Net Proceeds from the funds will primarily go to Trillium Health Partners.
- Charitable tax receipts will be issued to those who donated over $20 to THP.
- All participants are kindly requested to be at the starting point at 9:00am.

**Payment Options:**

1. Website: https://www.justgiving.com/fundraising/stsp
2. E-Transfer to info@peeltamilseniors.ca
3. Cheque in the name of Senior Tamils Society of Peel
4. Debit card payments available

905-290-3000 / 416-473-5380 (President: N.Moorthy)
www.peeltamilsociety.ca

பெருந்தன்மையுடன் நிதியாதாரம் அளிப்பவர்கள் CN alectra


செப்டம்பர் மாதம்
பிராம்ப்டன் நகர
மரங்களுக்கான மாதம் ஆகும்

brampton.ca/trees
@BramptonParksRec

கீழ்கண்டவாறு கொண்டாட எங்களுடன் இணையுங்கள்:
- மரம் நடும் முனைப்புக்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி அறிதல்
- கால அட்டவணையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகளில் பங்கெடுத்தல்
- குடியிருப்பகங்களில் நடுவதற்கான இலவச மரக்கன்றுகள் பெறுவதில் பங்கெடுத்தல்
BRAMPTON


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# "கம்யூனிசத்தின் மரணம் ஒரு மாயை — மார்க்சியம் எவ்வாறு இன்னும் தேசங்களையும், கட்சிகளையும், தொழில்களையும் வாழவைக்கிறது?"




### மார்க்சியத்தின் பிறப்பும் அதன் வரலாற்றுப் பயணம்

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கார்ல் மார்க்ஸ் மற்றும் ஃப்ரிட்ரிக் எங்கல்ஸ் இணைந்து மார்க்சியக் கோட்பாட்டை உருவாக்கினர். Communist Manifesto (1848) முதலாளித்துவத்தின் முரண்பாடுகளையும், தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிப் பாதையையும் விளக்கியது. பின்னர் Das Kapital (1867) உலக பொருளாதாரத்தை விமர்சிக்கும் அடிப்படை நூலாக அமைந்தது.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சோவியத் ஒன்றியத்தின் 1917 புரட்சி உலக அரசியலில் புதிய காலத்தைத் தொடங்கியது. பின்னர் சீனா (1949), கியூபா (1959) ஆகிய நாடுகள் மார்க்சியத்தை அரசின் அடித்தளமாக்கின.

### வரலாற்று நபர்: கார்ல் மார்க்ஸ் (1818-1883)

- ஜெர்மனியில் பிறந்தவர். வாழ்நாளின் பெரும்பகுதியை ஏழ்மை மற்றும் புலம்பெயர்ச்சியில் கழித்தார்.
- அரசியல் துரிதத்தில் வாழ்ந்தாலும், அவரது சிந்தனை உலகளாவிய இயக்கமாக மாறியது.
- "மார்க்சியம்" அவருக்கு வாழ்வாதாரமாக அமைக்கவில்லை. ஆனால் பிந்தைய தலைமுறைகளுக்கு அது ஒரு தொழில் வாய்ப்பு அமைப்பாக மாறியது.

### அரசியல் வாழ்வாதாரமாக மாறிய கம்யூனிசக் கட்சிகள்

மார்க்சியக் கட்சிகள் வெறும் அரசியல் அமைப்புகளாக மட்டுமல்லாமல் "வேலை வாய்ப்பு இயந்திரங்கள்" ஆகவும் மாறின.

- சீனா: இன்று 9 கோடிக்கும் மேற்பட்டோர் சீன கம்யூனிசக் கட்சியின் உறுப்பினர்கள். ஆய்வுகள் காட்டுவதுபடி, கட்சியினர் அரசுப் பணியிலும் தனியார் துறையிலும் அதிக சம்பளம் பெறுகின்றனர்.
- கியூபா: அரசு வேலை, கல்வி, மருத்துவம், ஊடகம் அனைத்தும் கட்சியுடன் இணைந்துள்ளன.
- மேற்கு நாடுகள்: Italy, France போன்ற நாடுகளில் கம்யூனிசக் கட்சிகள் உள்ளூர் தேர்தல்களில் இன்னும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

### வரலாற்று நபர்: மாவோ சே துங்க் (1893-1976)

- 1934-35 Long March (6,000 மைல் பயணம்) மூலம் கட்சியின் உயிரை காப்பாற்றினார்.
- 1949இல் சீன மக்கள் குடியரசை நிறுவினார்.
- அவரது ஆட்சியில் கல்வி, இராணுவம், தொழில்துறை ஆகியவை கோடிக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பு அளித்தன.
- மாவோவின் ஆட்சி "மார்க்சியம் அரசியலை வாழ்வாதாரமாக்கிய வரலாறு" எனப் பார்க்கப்படுகிறது.

### கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறையின் மார்க்சிய சந்தை

மார்க்சியம் கல்வி உலகத்தில் ஒரு பெரும் தொழில் வலையமைப்பை உருவாக்கியுள்ளது.

- சீனா: Xi Jinping ஆட்சியில் ஆயிரக்கணக்கான Schools of Marxism நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் "மார்க்சியக் கல்வி மையம்" உள்ளது.
- கியூபா: சோவியத் பாடத்திட்டங்கள் இன்னும் நிலைத்திருக்கின்றன.
- மேற்கு நாடுகள்: Harvard, Essex, York University போன்ற இடங்களில் மார்க்சிய ஆய்வுகள் தனிப் பிரிவாக உள்ளன.

### வரலாற்று நபர்: Marcello Musto (1976-இன்றுவரை)

- இத்தாலியைச் சேர்ந்த பேராசிரியர். கனடாவின் York University-இல் சமூகவியல் பேராசிரியராக உள்ளார்.
- Karl Marx's Grundrisse உள்ளிட்ட நூல்களைத் தொகுத்து வெளியிட்டார்.
- உலகளாவிய மாநாடுகள் மற்றும் Laboratory for Alternative Theories வழியாக ஆயிரக்கணக்கான மாணவர்களை ஈர்த்துள்ளார்.
- அவரது வாழ்வு, "மார்க்சியக் கல்வி உலகம் வாழ்வாதாரமாக மாறிய" நவீன எடுத்துக்காட்டு.

### ஊடகம் மற்றும் பதிப்பக உலகின் மார்க்சிய வலையமைப்பு

மார்க்சியம் ஊடகங்களிலும் பதிப்பகத்துறையிலும் பெரும் வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.

- சீனா: People's Daily, Xinhua ஆகியவை ஆயிரக்கணக்கான பத்திரிகையாளர்களை வேலைக்கு எடுத்துள்ளன.
- கியூபா: Granma (1965இல் தொடங்கியது) கியூபாவின் அரசு பத்திரிகை. இன்னும் அரசு சார்ந்த ஊடக அமைப்புகள் அனைத்தையும் ஒருங்கிணைக்கிறது.
- மேற்கு நாடுகள்: Jacobin, New Left Review, Monthly Review போன்ற பத்திரிகைகள் மார்க்சிய சிந்தனையை வணிகரீதியாகவும் அறிவுத்துறையிலும் பரப்புகின்றன.

### வரலாற்று நபர்: ஃபிடெல் காஸ்ட்ரோ (1926-2016)

- 1959இல் கியூபாவில் பாட்டிஸ்டா ஆட்சியை வீழ்த்தினார்.
- ஆட்சிக் காலத்தில் ஊடகம் முழுவதும் அரசு கட்டுப்பாட்டில் இருந்தது.
- Granma பத்திரிகை வழியாக ஆயிரக்கணக்கான பத்திரிகையாளர்கள், ஆசிரியர்கள், பதிப்பகத் தொழிலாளர்கள் வேலை பெற்றனர்.
- காஸ்ட்ரோ "மார்க்சிய ஊடக அரசியலின் வாழ்வாதார வடிவம்" எனக் கருதப்படுகிறார்.

### சித்தாந்த அதிகாரிகள் - அரசின் புதிய பணியகம்

மார்க்சியம் சித்தாந்த அதிகாரிகளின் வழியாக அரசின் நிர்வாக அமைப்பில் வேறு ஒரு "வேலை வாய்ப்பு பிரிவு" ஆக மாறியது.

- சீனா: ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் சித்தாந்தக் கட்டுப்பாட்டு பிரிவுகள் உள்ளன.
- கியூபா: பள்ளிக் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை மார்க்சிய பாடங்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன.
- மேற்கு நாடுகள்: தொழிற்சங்கங்களும் இடதுசாரி கட்சிகளும் "மார்க்சிய சிந்தனை" அடிப்படையில் தொடர்ந்து வேலை வாய்ப்புகளை உருவாக்குகின்றன.

### வரலாற்று நபர்: அன்டோனியோ கிராம்சி (1891-1937)

- இத்தாலிய கம்யூனிச சிந்தனையாளர். முசோலினியின் ஆட்சியில் சிறையில் அடைக்கப்பட்டவர்.
- Prison Notebooks வழியாக "Cultural Hegemony" என்ற கருத்தை உருவாக்கினார்.
- ஆட்சிக் கட்சிகள் கல்வி, ஊடகம், கலாசாரம் ஆகியவற்றை பயன்படுத்தி சமூகத்தை கட்டுப்படுத்துவதை அவர் வெளிப்படுத்தினார்.
- இன்று மேற்கு நாடுகளில் மார்க்சியக் கல்வி, ஊடகப் பாதிப்பு அனைத்தும் அவரது சிந்தனையின் தாக்கத்தை வெளிப்படுத்துகின்றன.

மார்க்சியம் அரசியல், கல்வி, ஊடகம், அரசுப் பணி, தொழிற்சங்கம் என அனைத்திலும் ஒரு "வாழ்வாதார இயந்திரம்" ஆக மாறியுள்ளது.

- மாவோ சே துங்க் - சீனாவில்.
- ஃபிடெல் காஸ்ட்ரோ - கியூபாவில்.
- Marcello Musto - மேற்கு உலகில்.
- அன்டோனியோ கிராம்சி - சிந்தனையின் உலகளாவிய தூணாக.

இவர்கள் அனைவரின் வாழ்க்கைச் சான்று ஒன்று மட்டுமே காட்டுகிறது -
"மார்க்சியம் ஒருபோதும் இறக்காது. அது மனிதர்களுக்கு வேலை, அதிகாரம், வாழ்வாதாரம் என்ற வடிவில் தொடர்ந்து உயிர்வாழும்."

**- எழுதியவர்: ஈழத்து நிலவன்**
***"இறந்துவிட்டது எனக் கருதப்பட்ட மார்க்சியக் கருத்துகள் எப்படி இன்னும் உலகத்தின் அரசியல், வாழ்க்கை, அதிகாரத்தை உருவாக்கி வருகிறது என்பதை அறியச் செய்யும் பயணம்."***
15-09-2025

*(15 பக்கத் தொடர்ச்சி)*

## *ஸ்ரீலங்கை அரசியலில் "மொட்டு" மீண்டும் மலருமா?*

இதனை உறுதிப்படுத்தும் விதமாகத்தான் "கொழும்பிலுள்ள அரச வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட நிலையில் தனது சொந்த ஊரான மெதமுலானாவுக்கு சென்றுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் "ராஜபக்சக்களை மட்டும் அல்ல தமக்கு அச்சுறுத்தலாக விளங்கும் அத்தனை பேரையும் ஆட்சியாளர்கள் பழிவாங்குகின்றனர். ஆனால் எனது அரசியல் பயணம் தொடரும். நாட்டில் மீண்டும் மஹிந்த சூறாவளி வீசும் என சூளுரைத்துள்ளார். அத்துடன் அது வேறு சூறாவளியாகவும் இருக்கலாம் என நாமல், ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் மறைமுகமாக குறிப்பிட்டும் கூறியுள்ளார்.

எனவே அரசியலில் எதுவும் நடக்கலாம். அரசியலில் நண்பனும் இல்லை பகைவனும் இல்லை இன்றைய ஆட்சியாளர்கள் நாளைய எதிர்க்கட்சியினர். இன்றைய எதிர்க்கட்சியினர் நாளைய ஆட்சியாளர்கள். இதுதான் அரசியல். எனவே ரணிலின் "யானை" எழும்பி நடக்க முடியாத நிலையில் இருந்த நிலையில் அநுரகுமார அரசு அதனை எழுந்து ஓட வைத்துள்ளதாலும் சஜித் பிரேமதாசாவின் "தொலைபேசி"க்கு சிக்னல் கிடைக்காத நிலையில் அதற்கு சிக்னல் கிடைக்க வைத்துள்ளதாலும் வாடிப்போயிருந்த ராஜபக்சக்களின் தாமரை மொட்டை புத்துணர்ச்சி கொடுத்து மலரும் நிலைக்கு கொண்டுவந்துள்ளதாலும் மீண்டும் ராஜபக்சக்களின் "தாமரை மொட்டு" ஆட்சி மலர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அதனை தடுக்க ராஜபக்ச குடும்பத்தின் முக்கிய தூண்களை அநுரகுமார அரசு உள்ளே தூக்கி வைத்தாலும் அது அதிசயமல்ல.

# மொன்றியால் வாழ் மூத்த எழுத்தாளர் யோகநாயதி நடராஜா அவர்களின் முத்தான மூன்று நூல்கள் ஸ்காபுறோவில் வெளியிடப்பெற்றன

















வெவ்வேறான பல விடங்களைப் பேசும் இந்த மூன்று நூல்களையும் நிதானமாகவும் நேர்மையாகவும் சிந்தித்து எமக்காக படைத்துள்ளார் திருமதி யோகநாயதி நடராஜா : அறிஞர் சாமி அப்பாத்துரை அவர்களின் புகழாரம்!

நாம் அனைவரும் இணைந்து எமது தமிழ் மொழியையும் தமிழர் மரபுகளையும் கலையையும் இலக்கியத்தை இந்த மண்ணில் தக்க வைக்கும் உன்னத பணியில் ஈடுபட்டுள்ளோம்: பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களின் நம்பிக்கை!

”கனடாவில் பெண் படைப்பாளிகள் எண்ணிக்கையில் பெருகி எமக்கு பெருமை சேர்க்க நாம் அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும்” உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கத்தின் ஆதங்கம்!

கனடா ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள ஸ்ரீ ஐயப்பன் ஆலய கலாச்சார மண்டபத்தில் 13-09-2025 அன்று சனிக்கிழமையன்று நடைபெற்ற “திருக்குறள்- சிந்தனை விளக்கம்“, “உள்ளத்தின் ஊற்றுக்கள்“- கவிதைத் தொகுதி, .“இலங்கையில் உள்ள ஆலயங்கள்“ ஆகிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழாவில் மொன்றியால் மாநகர் வாழ் திருமதி யோகநாயதி நடராஜா என்னும் பெண் படைப்பாளியின் மேற்படி நூல்கள் வெளியிடப்பெற்றன.

அந்த விழாவிற்கு அறிஞரும் ஆங்கில எழுத்துலகில் பிரகாசிப்பவருமான சாமி அப்பாத்துரை அவர்கள் தலைமை வகித்தார்.

அங்கு வாழ்த்துரை வழங்கிய பேராசிரியர் இ. பாலசுந்தரன் மற்றும் சிறப்புரையாற்றிய உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் ஆகியோர் மேற்குறிபிட்ட தொனிப்பொருளில் தங்கள் உரைகளை ஆற்றி வெளியீட்டு விழாவின் சிறப்பைத் தக்கவைத்தார்கள்.

அன்று வெளியிடப்பெற்ற மூன்று நூல்கள் பற்றிய வெளியீட்டு உரைகள் மற்றும் சிறப்புரைகள் ஆகியவற்றை கவிஞர் அகணி சுரேஸ் அவர்கள். முனைவர் வாசுகி நகுலராஜா. விரிவுரையாளர் நாகேஸ்வரி மற்றும் தமிழாசிரியை கமலவதனா சுந்தா ஆகியோர் ஆர்வத்துடன் மேடையில் சமர்ப்பித்து விழா நாயகி திருமதி யோகநாயதி நடராஜா அவர்களை மகிழ்ச்சியின் உச்சத்திற்கு அழைத்துச் சென்றனர்.

உறவினர்கள் நண்பர்கள். கலை இலக்கிய ஆர்வலர்கள் என பலரும் அங்கு கலந்து கொண்டு நூற் பிரதிகளைப் வாங்கிச் சென்றனர்.

மொன்றியால் வாழ் புகழ்பெற்ற அறிவிப்பாளர் உமா அவர்களின் வருகையும் அவரது பணியும் வெளியீட்டு விழாவிற்கு மகுடம் சூட்டின என்றால் அது மிகையாகாது.




# இவ்வார ராசிபலன்

**19-09-2025 வெள்ளி தொடக்கம் 25-09-2025 வியாழன் வரையும்**


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"

**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377



**மேஷம்:** வீரியத்தோடு செயல்படும் வாரம். காதல் கை கூடும். சுபச்செய்திகள் இல்லம் தேடி வரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. இடமாற்றம் நன்மை தரும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் உயரும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. தொழில் முன்னேற்றம் தரும். தொலைபேசி தகவல் மகிழ்ச்சி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. திருப்பங்கள் நிறைந்த காலம். பெண்களுக்கு அணிகலன் சேரும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். உறவினரால் உதவிகள் கிட்டும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பலன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை. புது முயற்சிகளை தள்ளிப்போடவும். பெரியோர்களின் ஆதரவு கிட்டும். ஆணவத்தை தவிர்ப்பது நல்லது. பயணத்தால் வெகுமதி கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். முடிவுகளில் தெளிவு இருக்கும். திறமைகள் வெளிப்படும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். மெத்தனப்போக்கு மாறும். மேன்மைகள் தொடரும். புதிய நட்பு உருவாகும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். நல்ல நேரத்தையும், நன்மையான காலத்தையும் உண்மையாக சந்திக்கக்கூடிய காலம். மௌன விரதம் இருப்பது நல்லது. கொடுத்த வெற்றியை சந்திப்பீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: *1,4,5,9*

அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,F



**ரிஷபம்:** பிரபல்யம் கிடைக்கும் வாரம். ஆதாயம் மிகுதியாகும். திட்டமிட்ட காரியம் ஜெயமாகும். நட்டமில்லாத நன்மைகள் அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டு. உத்தியோக உயர்வு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. அத்தியாவசிய செலவு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஏராள நன்மைகள் அதிகரிக்கும். கோபத்தையும், வேகத்தையும் தவிர்த்து லாபத்தை அடையும் காலம். எதிரிகள் தொல்லைகள் குறையும். தனவரவு அதிகரிக்கும். வாக்குவாதங்கள் உருவாகும். பணியில் கண்டிப்பு தேவை. பெற்றோர் நலனில் அக்கறை கூடும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். ஆன்மீக சிந்தனைகள் அதிகமாகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். மறைமுக எதிர்ப்பு வலுக்கும். காசு, பணம் சேர்க்கை அதிகரிக்கும். பொல்லாத காலங்கள் சொல்லாமல் விலகும். பொது வாழ்வில் புகழ் கூடும். எதிரிகளால் ஏற்றம் கிட்டும். அலைபேசித் தகவல் ஆதாயம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பூமி வாங்கும் யோகம் உண்டு. பிள்ளைகளால் பெருமை சேரும். உத்தியோக உயர்வு கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். ஏற்றங்கள் அதிகரிக்கும் காலம். பரபரப்பே இல்லாமல் பணவரவு பெருகும். மங்கல செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். ஆதாயம் பெருகக்கூடிய காலம். கல்வியால் செலவு ஏற்படும். குடும்ப ஒற்றுமை பலப்படும். குதூகலம் தழைத்தோங்கும். நிலம் வாங்க யோகம் உண்டு. வளம் பெருகும். உடல்நலம் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: *6,4,3,2*

அதிர்ஷ்ட நிறம்: வெளிர் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,A



**மிதுனம்:** உழைப்பால் மதிப்பு சேரும் வாரம். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. உறவினரால் செலவு உண்டு. நன்மதிப்பு பெருகும். பாராட்டுக்கள் கூடும். பரபரப்பான சூழ்நிலை மாறும். புதிய முயற்சியைத் தள்ளிப் போடவும். பெரிய திருப்பம் ஏற்படும். கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும். சகோதரியால் நன்மை உண்டு. படிப்பில் கவனம் தேவை. போட்டிகள் வெற்றி தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மை தரும். பாக்கியங்கள் அதிகரிக்கும். கசந்த காலம் விலகும். வசந்த காலம் உருவாகும். வலிமையான காலமாக அமையும். மாற்று எண்ணம் உதயமாகும். தோற்றப்பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவிகள் சேரும். பொதுபணியில் ஆர்வம் கூடும். சுப காரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்புத்தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டுக் கிட்டும். உடல்நலனில் அக்கறை தேவை. பயணம் நன்மைத் தரும். அச்சத்தைத் தவிர்ப்பது நல்லது. உச்சத்தை அடையும் காலம் ஏற்படும். ஆன்றோர்கள் வாழ்த்துக் கிட்டும். வியாபார வளர்ச்சி உண்டு. கொடுக்கல், வாங்கலில் பிரச்சனை ஏற்படும். உறவினரால் தொல்லை ஏற்படும். கொள்கையில் பிடிப்பு சேரும். உடல் உபாதை தீரும். பொறுப்புக்கள் கூடும். வருமானம் சேரும். சாதனை நிகழ்த்தக்கூடிய காலம். மேன்மைகள் அதிக அளவில் பெருகும் காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: *9,7,5,3*

அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,X



**கடகம்:** சவாலான விஷயங்களை சமாளிக்கும் வாரம். சினத்தை தவிர்ப்பது நல்லது. பணச்சேர்க்கை உண்டு. புத்தாடை சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். மன சந்தோஷம் கூடும். மருத்துவச் செலவு கூடும். அனுகூலமான போக்கு நிலவி வரும். காரிய அனுகூலம் தரும். கடனால் பிரச்சனை வரும். விவசாயம் விளைச்சல் தரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வெற்றி கிடைக்கக்கூடிய காலம். நல்லவராக இருப்பீர்கள். வல்லவராக வாழ விரும்புவீர்கள். கனவுகள் நிறைவேறும். ஆசைகள் பூர்த்தியாகும். தகுதியோடும், மிகுதியோடும் வாழக்கூடிய காலமாக அமையும். புதிய சொத்துக்கள் சேரும். காரியம் கைக்கூடும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். விளைச்சல் அதிகமாகும். விவசாயம் மேன்மை பெறும். வெளியூர் பயணம் ஏற்படும். உத்தியோக வாய்ப்பு கிட்டும். பூர்வீக சொத்து சேரும். அந்தஸ்து கூடும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. குதூகலம் சேரும். வியாபாரம் உயரும். வில்லங்கம் விலகும். தீய எண்ணம் விலகும். உடன் பிறப்புக்கள் தொல்லை தருவர். திடீர் தனவரவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. மனோதைரியம் அதிகரிக்கும். மரியாதையான குணம் அதிகரிக்கும். இனிய நட்புக்கள் உருவாகும். பெரிய வெற்றி கிடைக்கும். காதலில் கண்ணியம் கூடும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். திடீர் வரவு உண்டு. அரசியலில் புகழ் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திரௌபதி அம்மன், அதிர்ஷ்ட எண்: *7,4,1,9*

அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,K



**சிம்மம்:** எதிர்பார்த்த வளர்ச்சி கிடைக்கும் வாரம். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். ஆரோக்கியம் கூடும். தர்மச் சிந்தனையும் மேலோங்கும். வெற்றிகள் குவியும். எதிரிகள் உதிரியாவார்கள். கல்விச் சலுகைகள் கிட்டும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி உண்டு. தொழில் போட்டி மறையும். சோதனைகள் குறையும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். உத்தியோகம் திருப்தி தரும். பணி மாற்றம் ஏற்படும். சிறியவர் முதல் பெரியவர் வரை சிறப்புக்களை சந்திப்பார்கள். கஷ்ட காலங்கள் விலகும் காலம். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். திடீர் வரவுகள் உண்டு. ஆபரணங்கள் வாங்குவீர்கள். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். கல்வித்துறையில் உள்ளவர்களுக்கு கைமேல் பலன் கிடைக்கும். நிதி பற்றாக்குறை நீங்கும். கடன் பிரச்சனை தீர்வுக்கு வரும். கால்நடைகளால் சிரமம் உண்டு. கலைத்தொழில் கவனம் தேவை. செயல்திறன் வெளிப்படும். மங்களச்செய்தி வரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். காரிய வெற்றி கிடைக்கும். இளமையோடும், பெருமையோடும் காட்சியளிப்பீர்கள். பாராட்டுக்கள் தேடி வரும். பயணம் அனுகூலம் தரும். புதிய வாகனம் வாங்குவீர்கள். கடமையில் தடங்கல் ஏற்படும். காதலில் பிரிவு ஏற்படும். கல்விக்கடன் ஏற்படும். முதலீடுகளை தவிர்க்கவும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சலுகைகள் கிட்டும். கணவன், மனைவி ஒற்றுமை அதிகரிக்கும். நன்மைகள் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நரசிம்மர், அதிர்ஷ்ட எண்: *4,7,9,2*

அதிர்ஷ்ட நிறம்: வெளிர் நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,P



**கன்னி:** நினைத்தது நடக்கும் வாரம். திட்டமிட்ட காரியங்கள் நட்டமில்லாமல் நடக்கும். மகிழ்ச்சியான நிகழ்வுகள் நடக்கும். கலை ஆர்வம் பெருகும். உடல் உஷ்ணம் உண்டாகும். விபரீத போக்கு மாறும். பூர்வீக சொத்து வந்து சேரும். சொல்லில் கவனம் தேவை. வீண் வம்பு அதிகரிக்கும். புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. இயந்திர பணியில் நிதானம் தேவை. குழந்தைகள் நலத்தில் கவனம் தேவை. அலைபேசி செய்தி ஆனந்தம் தரும். துன்பங்கள் விலகும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். கற்பனைத் திறன் அதிகரிக்கும். கஷ்ட காலங்கள் விலகி அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். பூர்வீக சொத்து கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். சகோதரியால் லாபம் உண்டு. உறவினரால் உற்சாகம் கூடும். கைப்பொருள் களவுப்போகும். சுபச்செய்தி வரும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. முயற்சிகள் வெற்றி தரும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். புதிய நட்பு உருவாகும். பழையக் கடன் வசூலாகும். பொருளாதாரம் வளர்ச்சி பெருகும். மிகையான நன்மை கிடைக்கும். ஆறு வகையான செல்வங்கள் அமைதியாக கிடைக்கும் காலம். தொழில் வழி தொல்லை குறையும். பயணம் ஆதாயம் தரும். வழக்கு வெற்றி தரும். குழந்தைகளால் குதூகலம் கூடும். இடையூறுகள் அதிகமாகும். கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். உடன்பிறந்தவரால் ஆதாயம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: மஹாலஷ்மி, அதிர்ஷ்ட எண்: *9,5,4,1*


அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,A



**துலாம்:** இல்லம் வளர்ச்சி அடையும். கலையான தோற்றமும், கனிவான பேச்சும் அவசியம். தெளிவான சிந்தனையால் மலிவான நட்புக்கள் விலகும். தந்தையால் நலம் குறையும். மாணவர் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. தன்னம்பிக்கை கூடும். நிர்வாகத்திறமை அதிகரிக்கும். அரசாங்க அனுகூலம் உண்டு. நினைத்தது நிறைவேறும். அந்தஸ்து அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். பழையக்கடன் ஒழியும். இடமாற்றம் நன்மை தரும். சாதனைகள் நிகழும் காலம். பெண்களின் கௌரவம் உயரும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பணவரவு திருப்தி தரும். பல்வலி வந்து போகும். தாய்வழி உறவு நன்மை தரும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் நன்மை உண்டு. பூமியால் லாபம் உண்டு. பூர்வீக சொத்துக்களால் லாபம் உண்டு. சொல்லில் கவனம் தேவை. வீண் வம்பு அகலும். புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். இழந்த கௌரவம் திரும்ப கிடைக்கும். பெருமைகள் கூடும். வறுமைகள் விலகும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குழந்தைகள் நலத்தில் கவனம் தேவை. இனிய வாய்ப்புக்கள் கிடைக்கும். திருமகள் கிருபைகள் உண்டு. தெய்வ கடாட்ஷம் கிடைக்கும். குடும்ப ஒற்றுமை கூடும். நிதி நிலைமை சீராகும். உதவிகள் கிடைக்கும். விவாத முயற்சி வெற்றிதரும். பிணிகள் நீங்கும். பணியில் கவனம் தேவை. குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். கைப்பொருள் களவுப்போகும். விவசாயம் லாபம் தரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அலமேலுமங்கை, அதிர்ஷ்ட எண்: *1,4,5,9*

அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,Z




**விருச்சிகம்:** மரியாதை உயரும் வாரம். நடுத்தரமான நன்மைகள் அடுத்தடுத்து கிடைக்கும். மங்கள செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். மனைவியால் மதிப்பு உயரும். திடீர் செலவு ஏற்படும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். எண்ணங்கள் ஏற்றம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமானம் உண்டாகும். கலைத்தொழிலில் கௌரவம் கூடும். கனவு பலிதமாகும். வெளிநாட்டுப் பயணம் லாபம் தரும். வெகுமதிகள் சேரும்.

**(தொடர்ச்சி 22 பக்கம்)**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1164

## (வரலாறும் மரபும்)

# ஸ்ரீ கிருஷ்ணன் கோவில்

## திருகோணமலை

“ *வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்*
*பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க*
*ஞானமத ஐந்துகர மூன்று விழி நால்வாய்*
*ஆனைமுகப் பரவி அஞ்சலி செய்கிற்போம்.* ”

1910 ஆம் ஆண்டிலே ஏற்படுத்தப்பட்ட தர்மகர்த்தாசபையினர், இவ்வாலயத்தில் நிருத்த மண்டபம், தம்பமண்டபம், வாகனசாலை என்பவற்றைக் கட்டிமுடித்துள்ளனர். அசையாமணியொன்றினைத் திரு. சிற்றம்பலம் என்பவர் உபகரித்துள்ளார். பின்னர் 1945 ஆம் ஆண்டிலே இருந்த மகாசபையினர், முன்பிருந்த திருக்கோவில் தூபியை முற்றாக அகற்றி, வெள்ளைச் சீமெந்தால் நவீன சிற்பங்களை அமைத்து, அழகுமிக்க தூபியைத் தாபித்தனர். அத்தோடு இவ்வாலயத்தின் தெற்குவாசல் மண்டபம், வாகனங்கள், அர்ச்சகரின் வீடு முதலியவற்றையும் இவர்கள் செய்து முடித்தனர். இதனைத் தொடர்ந்து 1948 ஆம் ஆண்டு சித்திரை மாதம், இவ்வாலயத்தின் கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

அக்காலத்தில் மக்களிடையே வாசிப்புப்பழக்கத்தை ஏற்படுத்துவதில் இவ்வாலயம் பெரும்பணியாற்றியுள்ளது. இதன் முன்னோடியாகக் கொழும்புத்துறை சனசமூக நிலையத்தைக்கட்டுவதற்கு இவ்வாலயத்தின் கோவிற்காணியைக் குத்தகையாக வழங்கியுள்ளனர். இவ்வாறாக படிமுறை வளர்ச்சியாக இவ்வாலயம், சிறப்புற வளர்ச்சிபெற்று வந்துள்ளது. இவ்வேளையிலே மீண்டும் பல புனரமைப்பு வேலைகளைச் செய்து, 1979 ஆம் ஆண்டிலும் கும்பாபிஷேகம் நிகழ்த்தப் பெற்றுள்ளது. இக்காலப்பகுதியில் பரிபாலனம் செய்த தர்மகர்த்தா சபையினரின் மறைவைத் தொடர்ந்து, 21 பேர் கொண்ட நிர்வாகசபை ஆலயத்தைப் பரிபாலனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிர்வாகசபை ஆலயத்தை எவ்வாறு நிர்வகிப்பது என்பதற்கு ஓர் யாப்பும் ஏற்படுத்தப்பட்டது.

நாட்டின் சூழ்நிலை காரணமாகப் பெரும் இன்னல்களும், குழப்பங்களும், அழிவுகளும் 1980 ஆம் ஆண்டுகளின் பின்னர் இவ்வாலயத்திலும் நிலவியது. எனினும் தேவஸ்தானத்தின் பெருமுயற்சியால் நித்திய நைமித்திய பூசைகள் இவ்வாலயத்தில் தடையின்றி நடைபெற்றுள்ளது. ஆயினும் இக்காலப்பகுதியில் இவ்வாலயத்தில் நிகழ்ந்த அசம்பாவிதங்களால் ஆலயம் மாசுற்றபோது பிராயச்சித்த அபி'ேகத்தை உடன்செய்வித்து, மீண்டும் மூலமூர்த்தியை இருப்பில் அமர்த்திப் பூசைகள் தொடர்ந்து நடைபெறச் செய்தனர்.

இவ்வாறான நிலையில் ஆலயத்தில் புனராவர்த்தன கும்பாபிஷேகம் நடைபெறவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இதன்பிரகாரம் இவ்வாலயத்தின் தெற்கு மண்டபம் பூர்த்திசெய்யப்பட, திருமதி. பாக்கியம் சண்முகநாதன் என்பவர் பேருதவி புரிந்துள்ளார். வைரவர் கோவில், யாகசாலை, முதலியனவும் கட்டப்பட்டு, தூபிக்கு வர்ணம் தீட்டப்பட்டு, ஆலய மண்டபங்கள் வெள்ளையடிக்கப்பட்டு வர்ணந்தீட்டப்பட்டது. திரு. செல்லத்துரை செல்வநாயகம் என்பவர் இவ்வாலயத்தின் நவக்கிரக கோவிலைக் கட்டிமுடித்தார். அவ்வாறே சண்டேசுவரர் கோவிலைக் கட்டுவதற்கு திரு. க. இராஜசிங்கம் என்பவர் நிதி உதவி புரிந்துள்ளார். திரு. சோ. சிவபாலசிங்கம் அவர்கள் வாகனசாலையின் உட்சுவர்களுக்குப் பூச்சுவேலையைச் செய்து முடித்தார். ஆலய முகப்பிலே பிள்ளையார் படமொன்று சித்தரிக்கப்பட்டு வர்ணந்தீட்டப்பட்டு அழகுடன் இலங்க திரு. க. செந்தில்குமரன் என்பவர் உதவியுள்ளார்.


இக்காலப்பகுதியிலே ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் இவ்வாலயத்திலே கொடித்தம்பம் நிறுவி, பத்துத் தினங்கள் சிறப்பாக ஆலய மகோற்சவம் நடைபெற ஆரம்பித்தது. கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட ஸ்ரீ மன்றுளாடும் பெருமான் விநாயகமூர்த்தி ஆலயத்திலே மூலமூர்த்தி கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். தெற்கு நோக்கியுள்ள சபா மண்டபத்தில் விநாயகர், நடேசப்பெருமான், ராஜராஜேஸ்வரி, புவனேஸ்வரி அம்பாள், ஆகியோரும் எழுந்தருளியுள்ளனர். அத்தோடு சமயகுருமார் நால்வருள் ஒருவராகிய சைவம் வளர்த்த மணிவாசகரும் சபா மண்டபத்திலே காணப்படுகின்றார்.


அசம்பாவிதங்கள் நிறைந்த காலப்பகுதிகள் தவிர்ந்த ஏனைய காலங்களில் இக்கோவிலில் நாலுகாலப்பூசைகள் சிறப்பாக நடைபெறும். நவராத்திரி, திருவெம்பாவை, சித்திராபறுவம், சிவராத்திரி மற்றும் விநாயகருக்குரிய சிறப்பான விரதங்களும் திருநாட்களும் இவ்வாலயத்திலே மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுவது வழக்கம். பலதடவைகள் பல்வேறு சம்பவங்களால் இவ்வாலயம் அழிய நேர்ந்தபோதிலும், பக்தர்களுடைய ஆராத பக்தியின் காரணமாக மீண்டும் மீண்டும் புனருத்தாரணம் செய்யப்பட்டமையை இவ்வாலய வரலாறு தெளிவாக விளக்குகின்றது. இக்கோவிலில் 1989 ஆம் ஆண்டு, முதன்முதலாக மகோற்சவம் ஆரம்பமானது. கொடியேற்றம் நடைபெற்று வைகாசி விசாகத்தன்று தீர்த்த உற்சவத்துடன் விழா நிறைவு பெறும். விநாயகப்பெருமான் மீதும், இங்கு எழுந்தருளியுள்ள அம்மன் மீதும் பாடப்பெற்ற ஊஞ்சல்பாடல் பல காணப்படுகின்றன. பழனி ஆண்டவர் மீது டாக்டர். ஊ.வே. சுவாமிநாத ஐயர் அவர்களாலும், கோப்பாய் சபாபதி நாவலர் அவர்களாலும் பாடப்பெற்ற கீர்த்தனங்கள் கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட ஸ்ரீ மன்றுளாடம் பெருமான் விநாயகமூர்த்தியன் பெருமைகளையும், அருளையும் எடுத்தியம்புவனவாக அமைந்துள்ளன.

“ *திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்*
*சகட சக்கரத் தாமரை நாயகன்*
*அகட சக்கர வின்மணியாவுறை*
*விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.* ”

**வளரும்...**






# சென்னையில் தென்னிந்திய திரைப்பட செய்தியாளர் சந்திப்பில் ஒலித்த செம்மணி விவகாரம்

இலங்கை செய்திகள் Sri Lanka News

## இயக்குனர் கௌதமனுக்கு புகழாரங்கள் குவிகின்றன!

செம்மணி படுகொலை கொடூரமே இன்று அவர்களுக்கு எதிராக வெளியே வந்துகொண்டிருக்கிறது என தென்னிந்திய பிரபல இயக்குனரும் தமிழ் பேரரசு கட்சியின் நிறுவுனருமாகிய இயக்குனர் வ.கௌதமன் தெரிவித்துள்ளார்.

படையாண்ட மாவீரா திரைப்படத்தின் செய்தியாளர் சந்திப்பு அண்மையில் சென்னையில் நடைபெற்றது. அந்த திரைப்படத்தின் இயக்குனரும் நடிகருமான வ. கௌதமன் அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், அறம் கொண்ட எதையும் இந்த மண்ணில் வீழ்த்த முடியாது. சில காலம் மறைக்கலாம் ஆனால் அது மறுபடியும் எழுந்து வரும் கீழடி போல.

20 வருடங்களுக்கு முன்னர் ஆயிரக்கணக்கானவர்களை புதைத்த செம்மணி மண்ணில் இன்று சிங்களவர்களும் வந்து ஆய்வு செய்து தினம் தினம் தோண்டி எடுக்கின்றனர். பிறந்த குழந்தையின் கழுத்தில் கால் கட்டை விரலை வைத்து அழுத்தும்போது அந்த குழந்தை கத்துவதை இரசிப்பது என்பது என்ன மனநிலை?

என் தாய்க்கும், தாய் மொழிக்கும் சமமான தேசிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அறமாக ஆண்ட அந்த மண்ணில் நடந்த அந்த கொடூரமே இன்று அவர்களுக்கு எதிராக வெளியே வந்துகொண்டிருக்கிறது.

தோழர் தமிழரசன் வரலாற்றை படைப்பாக்க வேண்டும். மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் வரலாற்றை படைப்பாக்க வேண்டும். சரிந்து கிடக்கின்ற இந்த தமிழினத்தை தலை நிமிர்த்த, மீண்டும் ஒரு புதிய வரலாற்றை படைக்க, எம் தமிழினத்தின் எதிரிகளை தலை குனிய வைப்பதற்கு, எமது இனத்தின் எதிரிகள் எவரும் தலை தூக்கி நிமிரும்போது அவர்களை வெட்டி மண்ணோடு மண்ணாக புதைப்பதற்காக இந்த வரலாறுகளை படைக்க வேண்டும் - என்றார்.

# "அருவருக்கத்தக்க அரசியலுக்காக தியாகியைப் பயன்படுத்தும் தமிழ்க் காங்கிரஸ் முன்னணி" என இளங்குமரன் எம்.பி குற்றச்சாட்டு!



நினைவேந்தல்களை வைத்து தேர்தல் கணக்கு அரசியல் செய்யும் முன்னணியின் செயல் எப்போது நிறுத்தம் காணும் என நாடாளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இதனை தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவிக்கையில், தியாக தீபம் திலீபன் அண்ணனின் நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்க வந்த அமைச்சர் சந்திரசேகருக்கு அஞ்சலி செலுத்தும் உரிமையைத் தடுப்பது, தமிழ்க் காங்கிரஸ் முன்னணியின் செயல் எனில் - அது அயோக்கியத்தனத்தின் உச்சமே ஆகும்.

யாரும் யாரையும் அஞ்சலிக்கலாம் அதுதான் மனித மாண்பு. திலீபன் அண்ணன் போராடிய காலத்தில் அவருக்கு எதிராக நின்ற பலர் இன்று நினைவேந்தல்களில் பங்கேற்கின்றனர். அவர்களை முன்னணியே தேர்தல் அரசியலுக்காக அருகில் நிறுத்திக் கொள்கிறது. ஆனால், மற்றவர்களை அனுமதிக்க மறுப்பது எத்தகைய முரண்பாடு?

ஒரு மாவீரனின் - தியாகியின் நினைவேந்தலை வாக்குக் கணக்குப் பொருட்டு அரசியல் ஆக்கிரமிப்பு செய்வது ஒருபோதும் மன்னிக்க முடியாத குற்றமாகும். இது மனித மாண்புகளை மீறிய காட்டுமிராண்டித்தனமே தவிர வேறில்லை என குறிப்பிடப்பட்டுள்ளார்.

# இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** உடல்நிலையில் அக்கறை தேவை. சினம் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலை கட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். பிள்ளைவழி தொல்லை தீரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. திருப்பங்கள் நிறைந்த வாரம். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். உத்தியோக இடமாற்றம் உண்டு. கர்ஜனையோடு வலம் வரக்கூடிய காலம். பக்கத்து வீட்டு பகை மாறும். உடல்சோர்வு ஏற்படும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்டலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 4,8,9,1

அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,H




**தனுசு:** பிரயாணம் பெருமை தரும். புதிய நட்பு உருவாகும். மெத்தனப் போக்கு மாறும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர்கள் ஆலோசனை பயன் தரும். உடல்நிலையில் கவனம் தேவை. நட்பில் பிரிவு ஏற்படும். திட்டமிட்ட காரியம் ஜெயமாகும். குடும்ப மேன்மை அதிகரிக்கும். கட்டுமானப் பணியில் உள்ளவர்களுக்கு கௌரவம் அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழிலில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக் கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மறையும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். பூர்வீகச் சொத்து கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவு ஏற்படும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். நன்மைகள் அதிகரிக்கும் காலம். பணவரவு அதிகரிக்கும். தனித்து நின்று ஜெயித்துக் காட்டும் அற்புதமான காலம். புதிய வாய்ப்புத் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்புக் கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். இன்னல்கள் அகலும். குடும்ப தொல்லைகள் குறையும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். மன சஞ்சலம் குறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கல்வியில் மந்த நிலை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 7,2,4,8

அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,I




**மகரம்:** உன்னதம் நிறைந்த வாரம். உலோகத்தொழில் உயர்வு தரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பயணம் லாபம் தரும். எண்ணிய காரியம் கைகூடும். ஏற்றங்கள் அதிகரிக்கும். எதார்த்தமான சிந்தனையில் ஏறுமுகம் காணக்கூடிய ஆறுதலான காலமாக அமையும். அறிவாற்றல் பளிச்சிடும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். உடல்நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றம் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடும். புதிய தொழில் முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழையக்கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைவாற்றல் பெருகும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத் திறமை கூடும். தன்னம்பிக்கை கூடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. எடுத்த காரியத்தில் ஏற்றம் கிட்டும். படித்த கல்விக்கு உத்தியோகம் கிடைக்கும். உபயோகமான காலம். புதிய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்ப்பார்ப்புக்கள் குறையும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். உறவினர் வருகை உற்சாகம் தரும். பூமி சேர்க்கையுண்டு. ஏற்றுமதி தொழில் கவனம் தேவை. உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். அதிகாரம் உயரும். எதிர்பார்த்த வரவுகள் கிடைக்கும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 5,4,1,2

அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,G




**கும்பம்:** வம்பு தும்புகள் ஒழியும் வாரம். மகிழ்வான நிகழ்வுகளை சந்திக்கக்கூடிய சந்தோஷமான காலம். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புகள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். எண்ணிய காரியம் கைகூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். கஷ்ட காலம் விலகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். மன உற்சாகம் அதிகரிக்கும். வாகன அபிவிருத்தி ஏற்படும். வழக்குகளால் தொல்லை உண்டு. இயந்திர தொழிலால் லாபம் உண்டு. கடன் தொல்லைகள் குறையும். கூட்டுப் பிரார்த்தனையில் மோசடி ஏற்படும். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். புண்ணிய ஸ்தலப் பயணம் உண்டு. ஆரோக்கியம் சீராகும். நல்லோர் நட்பு கிட்டும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். உடன் பிறந்தவரால் சலசலப்பு ஏற்படும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். நிதி நிலைமை சீராகும். பணப்பற்றாக்குறை நீங்கும். பிரச்சனைகள் குறையும். சிறப்புக்கள் சேரும். தன்மானத்தோடு வாழும் காலம். தயாள குணம் மேலோங்கும். போட்டி, பொறாமைகள் விலகி நன்மைகள் பெருகும். வீரியத்தோடு செயல்படுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ஹரித்துவார், அதிர்ஷ்ட எண்: 2,9,4,6

அதிர்ஷ்ட நிறம்: கருநீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R




**மீனம்:** பணிவான பேச்சு அவசியம் தரும் வாரம். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். கனத்த வருமானத்தை தவிர்த்துக் கொள்ளும் காலம். அறிவாற்றல் பளிச்சிடும். மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள். உடல்நலம் சீராகும். புதிய பதவி வாய்ப்பு வரும். பணியில் உயர்வு உண்டு. பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடி வரும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். மனோபயம் ஏற்படும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. முதுகில் வலி வந்து போகும். திடீர் பயணம் உண்டு. மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். சுபகாரியம் கைகூடும். சொத்துச் சேர்க்கை உண்டு. அறிமுகம் இல்லாதவர்கள் மூலமாக ஆதாயம் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். செல்வமும், புகழும் சேரும். பணியில் கண்டிப்பு அவசியம். கல்விச்செலவு கூடும். வழக்கு முடிவிற்கு வரும். பக்குவமான பேச்சு அவசியம். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. மிகையான நன்மை கிடைக்கக் கூடிய மிக அற்புதமான காலம். மரபை மீறிப் பேசிய உறவுகள் மனதாரப் பாராட்டும் காலம். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். நீண்டநாள் பிரச்சனை முடிவிற்கு வரும். தாய் வழி உறவில் ஆதாயம் உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3

அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,V


VILLA KARUNA
HOME FOR SENIORS
HELPING HANDS
Santhiyaragam
Golden Super Singer
சந்தியாராகம்
Santhiyaragam
GRAND FINALE
SEASON SEVEN
LIVE MUSIC BY
The WIND
Nothing but music !
SEPTEMBER 27, 2025
AT 4:30 PM
TICKETS
$60
THAMIL ISAI KALAAMANRAM
OF ONTARIO
3-1120 TAPSCOTT RD,
SCARBOROUGH, ON
TICKETS & MORE INFORMATION:
Inthu/Para: 416-282-4535 | Kiruba: 416-564-4366 | Indrani: 416-200-6971

மொன்றியல் நகரில்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8



26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

தமிழ் நிர்வாகத்தில் இயங்கும் நிறுவனம்
RIDE-U
- Airport
- Niagara Falls
- Ottawa
- Montreal
- Quebec City
- USA
rideu2025@gmail.com
(416)789-6556
BOOK NOW



உதயம் 1537 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 19, 2025

# மொன்றியால் வாழ் மூத்த எழுத்தாளர் யோகநாயதி நடராஜா அவர்களின் முத்தான மூன்று நூல்கள் ஸ்காபுறோவில் வெளியிடப்பெற்றன

-வெவ்வேறான பல விடங்களைப் பேசும் இந்த மூன்று நூல்களையும் நிதானமாகவும் நேர்மையாகவும் சிந்தித்து எமக்காக படைத்துள்ளார் திருமதி யோகநாயதி நடராஜா : அறிஞர் சாமி அப்பாத்துரை அவர்களின் புகழாரம்!

-நாம் அனைவரும் இணைந்து எமது தமிழ் மொழியையும் தமிழர் மரபுகளையும் கலையையும் இலக்கியத்தை இந்த மண்ணில் தக்க வைக்கும் உன்னத பணியில் ஈடுபட்டுள்ளோம்: பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களின் நம்பிக்கை!

-கனடாவில் பெண் படைப்பாளிகள் எண்ணிக்கையில் பெருகி எமக்கு பெருமை சேர்க்க நாம் அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும்" உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கத்தின் ஆதங்கம்!

(தொடர்ச்சி 19ம் பக்கம்)





# "மார்க்கம் நகர சபை 7ம் வட்டாரத்திற்கான இடைத் தேர்தலில் வட்டாரத்தின் முன்னாள் அங்கத்தவர்கள் பலர் எனக்கு ஆதரவு வழங்குவதை பலமாகக் கருதுகின்றேன்"

## மார்க்கம் நகரசபை இடைத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் ஆரணி முருகானந்தன் தெரிவிப்பு!

"மார்க்கம் நகரசபையின் 7ம் வட்டாரத்திற்கு இதற்கு முன்பு அங்கத்தவர்களாக தேர்ந்தெடுக்கப்பெற்று பணியாற்றிய லோகன் கணபதி அவர்கள் மற்றும் காலிட் உஸ்மான் அவர்கள் ஆகியோர் எனக்கு ஆதரவு வழங்குவதை பலமாகவும் கருதுகின்றேன். அத்தடன் மிக விரைவில் நடைபெறவுள்ள எமது மார்க்கம் நகர சபையின் 7ம் வட்டாரத்திற்கான இடைத் தேர்தலை நடத்துவதா அல்லது கடந்த தேர்தலில் இரண்டாவது எண்ணிக்கையில் வாக்குகளைப் பெற்ற வேட்பாளருக்கு அந்தப் பதவியை வழங்குவதா என்று தடுமாறிய நிலையில் இருந்த மார்க்க நகரசபையின் தற்போதைய மேயர் மற்றும் அங்கத்தவர்கள் மத்தியில் நான் உரையாற்றுவதற்கு நேரடியாக அழைக்கப்பெற்றிருந்தேன்.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் மாமனிதர் துரைராஜாவின் உருவச் சிலையை திருநெல்வேலிச் சந்தியில் நிறுவ தீர்மானம்!



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் மாமனிதர் துரைராஜாவின் உருவச் சிலையினை திருநெல்வேலிச் சந்தியில் நிறுவுவதற்கு நல்லூர் பிரதேச சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் மாமனிதர் பேராசிரியர் துரைராஜாவுக்கு சிலை ஒன்றினை அமைப்பதற்கு இடமொன்றினை ஒதுக்குவது தொடர்பில் 18ம் திகதி வியாழக்கிழமை அன்றைய தினம் நடைபெற்ற நல்லூர் பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தில் தவிசாளர் மயூரனால் அறிவிக்கப்பட்டது.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)



# அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய பளுதூக்கல் போட்டியில் மன்னார் சித்திவிநாயகர் இந்து கல்லூரி மாணவி சம்சிக்கா தங்கப் பதக்கம் வென்றார்!

அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான தேசிய மட்ட 15 வயது பிரிவுக்குட்பட்ட பெண்களுக்கான பளுதூக்குதல் போட்டியில் வடமாகாணம் சார்பாக மன்னார் சித்திவிநாயகர் இந்து கல்லூரியின் மாணவி செல்வி சம்சிக்கா சத்தியசீலன் கலந்து கொண்டு தங்கப்பதக்கம் பெற்றுக்கொண்டார்.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

# தமிழொசை வானாலி ஆதரவில் நடைபெறவுள்ள "தமிழர் திருவிழா" வில் இனிய பாடல்களை எமக்குத் தருவதற்காக வந்துள்ள பாடகர்கள் முகேஸ் மற்றும் "ஸரிகமபா" புகழ் ஜீவன் ஆகியோர்



தமிழொசை வானாலி ஆதரவில் நடைபெறவுள்ள இவ்வாரம் நடைபெறவுள்ள "தமிழர் திருவிழா"வில் இனிய பாடல்களை எமக்குத் தருவதற்காக வந்துள்ள பாடகர்கள் முகேஸ் மற்றும் "ஸரிகமபா" புகழ் ஜீவன் ஆகியோரை தமிழோசை வானொலி நிறுவனர் ஶ்ரீகாந்தா விமான நிலையத்தில் வரவேற்பதைக் காணலாம்
(படம் ரவி அச்சுதன்)